# திறவுகோல்

ஐப்பசி 2048 / மாத இதழ்




தலை

மண்ணே போச்சு

பிராய்லர் குழந்தைகள்

மனிதன் எனும் மிருகம்

நதிநீர் இணைப்பு சாத்தியமா ??



வெளியீடு

மன்னையின் மைந்தர்கள் குழு

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# அழிவின் விளிம்பில் உழவு



மன்னை க.பொன்முடி

ஆதரவு கொடுக்க பழகு

நன்றாக படித்த பின்
நகரத்தை நோக்கி நகர்ந்து
நல்லதொரு பணியில் அமர்ந்து
நாசுக்காய் சொல்கிறோம்
விவசாயம் ஒரு வெட்டி வேலையென்று

யோசித்தோமா

நிலத்தின் தன்மையறிந்து
நீரின் தரத்தையறிந்து
பருவத்தின் காலத்தையறிந்து
பயிரின் வளர்ச்சியறிந்து
இயற்கை உரத்தினை வேர்வை துளிகளோடு கலந்தடித்து
நல்லதொரு நாளில்
நாட்டு மாடுகளை ஏரில் பூட்டி
நிலத்தினை உழுது
நீர்ப்பாய்ச்சி
நாற்றினை நட்டு
களையெடுத்து
காலம் கடக்காமல் கச்சிதமாய் அறுவடை செய்து....
உனக்காகவும்
உணவுக்காகவும்

உன் முப்பாட்டன் முப்போகமும் விளைவித்ததின் விளைவே

இன்றைய எகத்தால பேச்சினுடைய வாழ்வின் அடித்தளம் என்று....

எப்போது உணர்வோம்...
சிந்தித்து பார் தோழா

உழவு தொழில் தனக்கானது அல்ல...
நமக்கானது

இன்னுமும் அமைதியாய் இருப்பதின் பயனென்ன...

விளை நிலங்களை
விலை நிலங்களாக்கி
விலை நிலங்களை

வீட்டுமனைகளாக்கி
வீட்டுமனைகளை
வீடுகளாக்கி
வீட்டின் மேலே
வீட்டுத்தோட்டம் அமைத்து...
அவ்வீதி தோரும் தரும் விளக்கம்

என்னவென்று சொல்வது... ???

வளம்குன்றா வயல்கள்
வறண்ட நிலங்களாயின...
கண்மாயும் குளங்களும்
காணாமல் போயின...
காவிரி நீரோ
கானல் நீரானது...
நிலத்தடி நீரோ
நீர்த்துப்போனது...
நெற்களஞ்சியம்
சொற்களஞ்சியமானது...
சோதனைகளை தாங்கி
சோர்ந்து போகாமல்

உழவை காக்க
உணர்வினை இழந்து
நிவாரணம் கேட்டு
நிர்வாணமாய் நின்றான்!


கண்டுகொள்ள வேண்டிய அரசுகளோ
கண்கட்டி வாய்பொத்தி நின்றன....

என்செய்வான் உழவன்
தன் உழவை இழந்தான்
தன் உயிரை துறந்தான்....

அதையும் கடன் தொல்லையாலென்று
கண்கட்டி கடந்து போகிறோம்....

இனியாவது சிந்திப்போம்...
இயன்றவரை குரல் கொடுப்போம்...
உழவைக் காப்போம்..
உழவனின் உயிரையும் காப்போம்...

- மன்னை க.பொன்முடி



**சு. விமல்ராஜ்**
அர்பன் பேங்க் மேல்நிலைப் பள்ளி
மன்னார்குடி

# தலை


இராசசேகரன் மன்னை

தலைப்பைக் கேட்டவுடன், திரையை நோக்கி நம் கவனத்தை திருப்பாமல், தரையை நோக்கி கவனத்தை செலுத்துவோம்.

என் தலையை அடமானம் வைத்தால் கூட யாரும் வாங்க முன் வரமாட்டார்கள். அந்த அளவிற்கு நான் செல்லா காசு என்று நம்மில் பலர் நட்பு, உறவினர் வட்டத்தில் கூறியது உண்டு. அதே நேரத்தில் நண்பர்களும், உறவினர்களும் நம்மை பற்றி கேலியாகவும், கோபமாகவும் பேசியதை கேட்டிருப்போம்.

நம் ஒவ்வொருவரின் தலைக்கும் அப்படி என்னதான் மதிப்பு இருக்கிறது என்று புரியாமல் தான் நாம் வாழ்ந்து வருகிறோம்.

இந்த சூழ்நிலையில் தான் பிச்சைக்காரர்கள் முதல், உடல் ஊனமுற்றவர்களின் தலை வரை அனைத்தையும் கணக்கெடுத்து அரசியல்வாதிகள், வியாபாரிகள் சம்பாதிக்கிறார்கள். நம் தலையின் மதிப்பை நாம் உணர்ந்ததை விட, சுற்றி உள்ள சந்தை நன்றாக உணர்ந்து வியாபாரம் செய்கிறது.

அனைத்திற்கும் ஒரு கணக்கெடுப்பு உள்ளது அந்த கணக்கு தான் முதலீட்டை தீர்மானிக்கிறது.

முதலீடு என்பதே நுகர்வோரின் அடிப்படையில் தான் கட்டமைக்கப்படுகிறது. அது அனைத்து தளங்களிலும் அதாவது பிச்சைக்காரர் தொடங்கி பில்கேட்ஸ் வரையிலும் அயோக்கியன் தொடங்கி அரசியல்வியாதிகள் வரையிலும் முதலீட்டிற்கான நம்பிக்கையை கொடுப்பது இந்த தலை சார்ந்த கணக்கெடுப்பே.

சாதாரணமாக ஒருவர் தனது வாழ்நாள் முழுவதும் பிச்சையெடுப்பது மட்டுமே வழி என்று தீர்மானித்துவிட்டால் அவரின் அடுத்த முடிவு எங்கே கூட்டம் அதிகம் வருகிறது அந்த இடத்திற்கு சராசரியாக எத்தனை தலைகள் வந்து செல்கின்றன. வருபவர்கள் தானம் கொடுக்கும் அளவிற்கு வசதியானவர்களா என்று ஆராய்ந்து இடத்தை தேர்தெடுக்கிறார்கள் இதில் கோவில், சர்ச், மசூதி மற்றும் பூங்காக்கள் என எந்த பாகுபாடும் கிடையாது இதிலும் விழாக்கால இடப்பெயர்வுகளும் உண்டு இதே போன்று தான் அனைத்திற்கும் தலைகள் கணக்கெடுக்கப்படுகின்றன.

ஒருவர் ஒரு வியாபாரம் தொடங்க வேண்டுமெனில் எந்த பகுதியில் மக்கள் கூட்டம் வரும் அந்த இடத்தில் நாம் தொடங்கும் வியாபாரத்தை எத்தனை பேர்கள் நடத்துகிறார்கள் அவர்களிடம் இருந்து வேறுபட்டு வாடிக்கையாளர்களை எப்படி கவர்வது என்று கணக்கிட்டே தொடங்கப்படுகின்றன. அனைத்திற்கும் நம்பிக்கை கொடுப்பது வாடிக்கையாளர்களின் தலையே.

ஏன் இவ்வளவு? நமது உயிரை பாதுகாக்கின்ற மருத்துவத்துறையில் இரத்த அழுத்தத்தை மட்டுமே கணக்கில் கொண்டால் 170/150 என்று இருந்த அளவு உலக மருத்துவ கழகத்தால்

120/100 என்று வகுக்கப்படுகிறது. மேலோட்டமாக பார்த்தால் இது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தெரியும். சற்று ஆளமாக சிந்தித்தால் 150 க்கும் 100 க்கும் இடையில் எத்தனை கோடி மக்கள் தினமும் தொடர்ந்து மாத்திரை எடுத்து கொள்ளும் நிலை வரும், அதன் வருமானம் எவ்வளவு இருக்கும்! ஆனால் இரத்த அழுத்த பாதிப்பு என்பதே நம்மை மனதளவில் நோயாளியாக்கி ஆபத்தை உருவாக்கும் என்பது வேறுவிடயம். ஆனால் அடமானமாவது நமது தலைகளே.

ஒரு தொலைக்காட்சி நிறுவனம் ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்புகிறது அதற்கான வருமானம் அந்த நிகழ்ச்சிக்கான விளம்பரத்திலே உள்ளது. விளம்பரம் எதன் மூலம் அதிகமாகிறது பார்வையாளர்களான நம்மை கணக்கில் கொண்டு தானே! அதே போன்று திரைப்பட முன்னணி நடிகர்களின் வருமானம் பல கோடிகளை கடந்து போகிறது. எதை கொண்டு? இரசிகர்களான நமது தலைகளை கணக்கில் கொண்டு தானே.

இவ்வளவு ஏன், இன்று பெண்ணிற்கு திருமணம் முடிக்க ஆபரண நகைகளோடு வாகனம் வாங்கி கொடுப்பது கட்டாயமாகிவிட்டது அதுவும் இருசக்கர வாகனத்திலிருந்து வசதிக்கேற்றவாறு மகிழுந்து வரை நீள்கிறது இந்த நடைமுறை எத்தனை காலங்களாக உள்ளது என்று சிந்தித்து பாருங்கள்.

ஆதிகாலத்தில் என்றிருந்தால் சென்ற தலைமுறையில் மிதிவண்டி சீதனமாக கொடுத்திருக்க வேண்டும் தானே! திடீரென இருசக்கர வாகனம் கொடுக்கும் பழக்கம் எங்கிருந்து வருகிறது. எல்லாம் திருமணம் முடிக்க வேண்டிய தலைகளின் எண்ணிக்கையிலும் பன்னாட்டு நிறுவனங்களின் சூழ்ச்சியான உளவியல் தாக்கத்திலிருந்து தொடங்குகிறது அதன் மூலம் ஒரு பொதுக்கருத்து உருவாக்கப்படுகிறது.

உங்களுக்கு புரிந்ததா என்று தெரியவில்லை, எனக்கு புரிந்தது ஐஸ்வரியா ராய், சுஸ்மிதா சென் போன்றவர்கள் தொடர்ந்து உலக அழகிப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு முன் இங்கே அழகு சாதனப்பொருட்களின் பயன்பாடு எவ்வளவு? அவர்கள் பங்கெடுத்து வெற்றிப்பெற்ற பிறகு எவ்வளவு அதிகரித்துள்ளது. காலப்போக்கில் ஆண்களும் பயன்படுத்த தொடங்கி விட்டனர். அந்த அளவிற்கு நமது தலைகள் அவர்களின் வியாபார சந்தைக்கு தகுந்தாற் போல உளவியல் தாக்கத்தை ஏற்படுத்த வைத்துள்ளன. அவர்கள் எதிர்பார்க்கும் தலைகள் இங்கு இல்லை என்றால் இவர்கள் எங்கிருந்து உலக அழகியாவது.

அரசியல் கேட்கவே வேண்டாம். நமது தலைக்கு வாக்கு என்ற ஒன்று இல்லை என்றால் இந்நேரம் நமது உடலுறுப்புகளையும் அறுத்து காசாக்கி இருப்பார்கள். அந்த அளவிற்கு அளவில்லாத ஆற்றலில்லாத தலைவர்களை கடவுள்களாக வணங்கி தன்னையும் தனது சந்ததிகளையும் பலிக்கொடுக்கும் இரசிக தலைகள் இங்குள்ளது.

அனைத்து கட்சிகளுமே, வேட்பாளர்களை எதன் அடிப்படையில் இங்கு தேர்வு செய்கிறார்கள். வேட்பாளருக்கு கட்சியினரின் ஆதரவும் தொகுதியின் பெரும்பான்மை சாதியினராகவும் இருக்க வேண்டும். அந்த சாதியில் அவருக்கு ஆதரவும் இருக்க வேண்டும்.

அதே நேரத்தில் தனது கட்சியின் மாற்று சாதியினரின் ஆதரவும் அந்த வேட்பாளருக்கு இருக்க வேண்டும். அது போக தொகுதி மக்களின் எண்ணிக்கைக்கு தகுந்தாற்போல்

பணப்பட்டுவாடா, மது என ஆதரவு எண்ணிக்கையை உயர்த்த மொத்த தலைகளிலும் மிளகாய் அரைக்க தெரிந்திருக்க வேண்டும்.

இதன் பிறகு தொகுதி மக்களின் தலைகளை கணக்கிட்டு பெரும்பான்மை வாக்குகள் வாங்குகின்ற அளவிற்கு பணப்பட்டுவாடா செய்து வெற்றி பெற வேண்டும்...

வெற்றிப்பெற பல வாக்குறுதிகளை அள்ளி வீசியவர்கள் அதை நடைமுறைப்படுத்த பல திட்டங்களை பல்லாயிரம் கோடி மதிப்பீட்டில் வெளியிடுவார்கள். அது அனைத்தையும் கூட்டினால் இந்த நாடு புழக்கத்தில் விட்டுள்ள தொகையை விட அதிகமாக இருக்கும், ஆனாலும் அறிவிப்பார்கள். அனைத்தும் நமது எண்ணிக்கைக் கொண்டே.

அனைவருக்கும் தொலைக்காட்சிப் பெட்டி, அனைவருக்கும் மின்விசிறி, அனைவருக்கும் மிக்ஸி, கிரைண்டர், அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் மிதிவண்டி என்று அறிவிப்புகள் ஏராளம், அனைத்திற்கும் தனியாருக்கு ஒப்பந்தம் வழங்குவதில் வருமுடி தாராளம்.

அதுபோக கொடுக்கப்படும் இலவசங்கள் அனைத்தும் மின்சாதன பொருட்கள் அதற்கு தேவையான மின்சாரத்தை உருவாக்க பன்னாட்டு முதலாளிகள் முதற்கொண்டு பினாமி முதல் கூலிகள் வரை செழிப்படையும் திட்டங்களால் வருகின்ற வருமானங்கள் அனைத்தும் விழாக்கோலம் இவை அனைத்தும் நமது தலைகளின் மூலதனம் என்பதை எவரும் அறிவதில்லை.

அது போல மொத்த குடும்ப அட்டைகளையும் கணக்கில் கொண்டே உணவு பொருட்கள் வினியோகிக்கப்படுகின்றன ஆனால் எத்தனை சதவீத குடும்ப அட்டைதாரர்கள் அங்காடிக்கு வந்து பொருட்கள் வாங்குகிறார்கள்? வாங்குகிற குறைவானவர்களுக்கு மாதத்தின் நான்காம் நாள் பொருட்கள் கிடைப்பதில்லை. இதுவே எதார்த்த நிலைமை, ஆக வாங்காதவர்கள் கணக்கில் உள்ள பொருட்கள் கள்ளச்சந்தையில் இலாபமாக்கப்படுகிறது.

நம்மால் அடித்து கூற முடியும், அரசாங்கம் அறிவிக்கும் அரிசி முதல் ஆபரணம் வரை அனைத்தையும் அனைத்து வாக்காளர்களும் பயன்படுத்தினால் இந்த அரசு ஒரே நாளில் திவாலாக வேண்டியது தான். ஆனால் என்ன செய்வது, அறியாதவர்கள் அடிமையாக கிடைத்ததை பெரிதாக கருதுகிறார்கள். அறிந்தவர்கள், இவர்கள் இப்படி தான் என்று கடிந்தே வாழ்க்கையை கடக்கிறார்கள் கடைசி வரை தனது பலத்தை எவரும் அறிவதில்லை.

முதியவர்களின் தலையை தனியாக கணக்கெடுத்து மூக்கு கண்ணாடி, இலவச மருத்துவம் என்று பல கோடி மதிப்பில் அறிவிப்புகள் வெளியிடப்படும். ஆனால் அந்த கணக்கெடுப்பில் உள்ள எண்பது சதவீதம் பேர் அந்த சலுகைகளை பயன்படுத்த வாய்ப்பற்ற வயோதிகர்களாகவே இருப்பார்கள். மீதம் உள்ளவர்களும் இவர்களின் அலைக்கழிப்பில் அழைந்து அடங்கிவிடுவார்கள். ஆனால் ஒதுக்கப்பட்ட நிதி மட்டும் வேறொரு சுரண்டலை ஈடுசெய்யும். இப்படியே நமது வரி பணம் கருவூலத்தில் இருந்து அபகரித்து அரசியவியாதிகளின் அகோரப்பசிக்கு இரையாகிறது.

பிறந்த பிள்ளைகள் மற்றும் பள்ளி குழந்தைகள் என்று அனைத்து தலைகளையும்

கணக்கெடுத்து உணவு பொருள்கள், சீருடை, செருப்பு என்று பல வகையில் வியாபாரம் நடக்கிறது. நமது தலைகளை வைத்து விபச்சாரமும் நடக்கிறது.

இந்திய ஒன்றிய அரசு பண மதிப்பிழப்பு நடவடிக்கையை எந்த அறிவிப்புமின்றி வெளியிட்டு சாமானியனை சந்தியில் நிறுத்தியது. பிரதமரே ஐம்பது நாட்களில் சரியாகவில்லை என்றால் எனது உயிரை இழப்பேன் என்று சமாதான சக்கரத்தை உருட்டினார். ஆனால் பல அறிவுசீவிகள் ஆகா ஓகோ என்று புகழ்ந்து தள்ளினர். ஆனால் இதில் இந்த சாமானியனின் தலை எப்படி உருட்டப்பட்டது என்று எவரும் அறியவில்லை. மாநில ஆளுங்கட்சியும் எதிர்கட்சியும் கூட அறிவிக்கவில்லை காரணம் உருட்டு அப்படி.

நாம் அனைவரும் அறிந்த ஒன்று தான் உலக வங்கியில் இந்தியா வாங்கிய கடனிற்கு வட்டி கூட கட்டமுடியாத நிலையில் தான் நமது பொருளாதாரம் இருக்கிறது. இதில் வியாபார காந்தங்களுக்கு வேறு அளவிற்கு அதிகமாக கடன் கொடுத்துவிட்டது இதனை வசூல் செய்யவும் இயலவில்லை.

ரகுராம் ராசன் கவர்னராக இருந்த வரை எவ்வளவோ முயற்சி செய்தும் முடியாமல் விவசாயிகளின் வாகன கடன், மாணவர்களின் கல்வி கடன் என்று தட்டுமுட்டு சாமான்களை உருட்டிக்கொண்டிருந்தனர். இந்நிலையில் ஒன்றியத்திடம் இரண்டு வாய்ப்புகளே இருந்தன.

ஒன்று கடனை கட்டுவதற்கு வழியில்லை என்று மஞ்சள் கடிதம் கொடுக்க வேண்டும் இல்லையேல் எசமானர்களின் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். இது மிகப்பெரிய பின் விளைவுகளையும் சாமானியனிடம் பெரிய தாக்கத்தையும் ஏற்படுத்தும். பிறகு என்ன செய்வது என்று சிந்தித்த போது தான் தேர்தலில் சந்தித்த நமது தலைகள் நினைவிற்கு வந்தது.

அனைவருக்கும் வங்கி கணக்கு தொடங்கும் கவர்ச்சி திட்டம் அறிவிக்கப்பட்டது சாமானியன் வரை வங்கி கணக்கும் பணம் எடுக்கும் அட்டையும் வழங்கப்பட்டது அடுத்து கவர்னரும் மாற்றப்பட்டார். பிறகென்ன நமது தலையை மொட்டையடிக்க வேண்டியது தானே! அடித்தார்கள். வாராக்கடனை வசூல் செய்ய முடியாத கடனாக மாற்றினார்கள் நமது அஞ்சறைப்பெட்டியில் இருக்கும் பணம் வங்கி வரை கொண்டு சென்று நிதிநிலையையும் சமன் செய்து கொண்டார்கள்.

நீண்ட காலம் நாம் விமர்சனம் செய்யாத அளவிற்கு திட்டம் தோல்வி என்று அறிவித்துவிட்டு பிரதமரின் தலையையும் காப்பாற்றிவிட்டார்கள். இது என்ன சாதாரண விடயமா, ஒன்றியத்தின் நிதி ஆதாரமே நமது தலை தான். ஆனால் நாம் தான் நமது தலையின் கனத்தை உணர்வதில்லை. இதனால் தான் இவ்வளவு அடிப்பட்டும் அடிமையாக வாழ்கிறோம்.

''நூறு அடிமைகளை அடக்க தெரிந்தவர் தெருவிற்கு தலைவர் பத்து தெருவின் தலைவரை அடக்க தெரிந்தவர் ஊரின் தலைவர்'' நூறு ஊர் தலைவர்களை அடக்க தெரிந்தவர் நாட்டின் தலைவர் ஆக ஒரு நாட்டின் தலைவரை தேர்ந்தெடுக்கும் அடிமைகள் தங்களின் ஆளுமையை உணர்ந்தால் தனது தலையின் வலிமையை அறிந்தால் தங்களை ஆட்டிவைக்கின்ற ஒரு சதவீத தலைவர்களை தொன்னூற்று ஒன்பது சதவீத தலைகளும்

இணைந்து ஆடவிடலாம்.

நாம் ஒருவர் மாற்றி வாக்களித்தாலே ஆளுங்கட்சி எதிர்கட்சியாகும், எதிர்கட்சி ஆளுங்கட்சியாகும். அந்த அளவிற்கு வலிமையானவர்கள் நாம்.

ஆளுமை நமது ஆள்காட்டி விரலில் தான் உள்ளது.

இதை உணர்ந்தால் மட்டுமே நாம் தலை நிமிர்வோம்.

## - இராசசேகரன் மன்னை

போன தீபாவளி புது சட்டை கிழிஞ்சிருச்சி
அடுத்த தீபாவளி அவசரமா வந்திருச்சு

கோடை விவசாயம் சோடை போயிருச்சு
கோணி சாக்குக்குள்ள எலிங்க குடி புகுந்துருச்சி

சம்பா குருவைன்னு சடசடயா வெளஞ்ச நிலம்
கள்ளி கருவைகளை கல்யாணம் பண்ணிக்கிச்சி

உதவி குழு கொடுத்த ஒத்த பசுமாடும் ஒடப்பொறந்த சீதனமா
உள்ளிக்கோட்டை போயிருச்சு

அங்க இங்க வேலை செஞ்சி கைல நாலு காசு பாத்தா
முந்தா நாலுதான் என் மூத்த மகள் குத்த வச்சா

பருவ மழை பேஞ்சி மண் சுவத்த மல்லுக்கட்ட
பாதி சரிஞ்சிருச்சி பங்கு சந்தை ஆயிடுச்சி

அதுக்குள்ள அவசரமா தீபாவளி வந்திருச்சு
இந்த ஏழை வீட்டு ரோக்காவும் ஏற்பாடு ஆயிடுச்சி

இந்த கரை வேட்டி காரனுங்க கண்டுக்காம போனாலும்
அந்த வார வட்டி காரணால வந்துடுங்க தீபாவளி

அனைவருக்கும்
இனிய தீபாவளி
நல்வாழ்த்துகள்

## சீதாரம் சங்கர்
B.SC., M.T.T.M., D.C.F.A., D.Q.M.,

# பகிரி


செந்தில்குமரன்
மன்னார்குடி

தற்போது கைப்பேசி என்று எடுத்துக் கொண்டால் பகிரி (Whatsapp) இல்லாத செயலியே (Application) பார்க்க முடியாது.
ஒருவரிடம் தொடர்பு எண் வாங்கும் போதே இந்த நம்பர் whatsapp நம்பர் தானே? என கேட்கின்றனர்.

சாதாரணமாக 10000 பதிவிறக்கம் ஆன செயலியே பல்லாயிரக்கணக்கில் வருமானம் ஈட்டுகிறது. அப்படி பார்த்தால் Whatsapp ன் வருமானம் எவ்வளவு இருக்கும் என யோசித்துப் பாருங்கள்.

YouTube, Facebook, Twitter போன்ற செயலிகள் விளம்பரம் மூலம் கோடிக்கணக்கில் பணம் ஈட்டுகிறது. ஆனால் நீங்கள் உபயோகிக்கும் Whatsapp ல் விளம்பரமே வராத போது அது எவ்வாறு வருமானம் பெறுகிறது?

சிலர் இப்படி கூறுவதை கேட்டு இருக்கிறேன். அதாவது, பகிரியை எந்த தொலைத்தொடர்பு நிறுவன தரவு வழியாக உபயோகிக்குறோமோ, அதில் பாதி பகிரிக்கு செலுத்தும். எளிதாக சொல்ல வேண்டும் என்றால் ஏர்டெலில் 300ரூபாய்க்கு 1024 MB Recharge செய்து அதில் பகிரி 400 MB பயன்படுத்தினால் 1 MBக்கு 1 பைசா என்ற கணக்கில் ஏர்டெல் பகிரிக்கு வழங்கும் என கூறுவார்கள். ஆனால் இது முற்றிலும் பொய்...

பிறகு எவ்வாறு தான் வருமானம் வருகிறது? 2014 ல் முகநூல் ஏன் பகிரியை 19.3 பில்லியன் டாலர் கொடுத்து வாங்க வேண்டும்?

பகிரி உருவானதற்கு காரணமே விளம்பரத்தின் மீதான வெறுப்பால் தான். பகிரியை உருவாக்கிய ஜான் கோம் தனது நண்பர்களுடன் குறுஞ்செய்தி அனுப்பிக் கொண்டிருக்கையில், இடையிடையே வந்த விளம்பர குறுஞ்செய்திகள் எரிச்சலை ஏற்படுத்தி இருக்கிறது.

விளம்பரத்தின் தொந்தரவு இல்லாமல் குறுஞ்செய்தி அனுப்ப முடிவெடுத்து நண்பர்களுடன் இணைந்து பகிரியை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். எந்த ஒரு நிறுவன தள்ளுபடி சலுகையோ, வேறு விளம்பரமோ இல்லாமல் குறுஞ்செய்தி அனுப்ப இலகுவாக இருந்ததால் பகிரி உலகமெங்கும் பரவியது.

ஆரம்ப காலகட்டத்தில் பகிரியை ஒரு வருடத்திற்கு மட்டுமே இலவசமாக பயன்படுத்த முடியும். பிறகு 357 ரூபாய் கட்டினால் மட்டுமே அடுத்த ஒரு வருடத்திற்கு பயன்படுத்த முடியும்.

இதன்மூலம் வருமானம் ஈட்டிக் கொண்டிருந்த பகிரியை, முகநூல் 19.3 பில்லியனுக்கு வாங்கிக் கொள்கிறேன் என்று சொன்னதும் அதற்கு சம்மதித்து விட்டனர்.

முகநூல் வசமான பகிரி, முற்றிலும் இலவசமான செயலியாக மாறியது. ஆனால் வருமானம்??

பகிரி மூலம் எந்த ஒரு வருமானமும் தற்போது வருவதில்லை. முற்றிலும் முகநூலில் இருந்து வரும் வருமானத்தை வைத்து தான் பகிரி ஓடுகிறது.

விரைவில் பகிரியில் விளம்பரங்கள் அடங்கிய குறுஞ்செய்திகள் வருவதற்கான கட்டமைப்புகள் வர போகிறது.

முதற்கட்டமாக நீங்கள் முன்பதிவு செய்யும் பேருந்து, ரயில், விமான பயணச் சீட்டுகள் இனி பகிரியில் தான் வரும். SMS ஆக வராது.


இதைத் தொடர்ந்து பெரிய நிறுவனங்களின் சலுகைகளும் வர தொடங்கும். இதன் மூலம் பல பில்லியன் கணக்கில் வருமானம் வர போகிறது.

அதுமட்டுமல்லாமல் பெரிய நிறுவனங்களின் விளம்பரம் வருவது பிடிக்கவில்லை என்றால் பணம் கட்டி Premium User ஆக மாறினால் உங்களுக்கு விளம்பரங்கள் வந்து சேரா வண்ணமும் அவர்கள் வடிவமைக்கலாம்.

இதற்கான பாதி வேலைகளை முகநூல் முடித்து விட்டது.

விரைவில் மாறுபட்ட கோணத்தில் பகிரி உங்களை அழைத்துச் செல்லும்.

- செந்தில் குமரன்
மன்னார்குடி



பா. சாந்தனு
மன்னார்குடி

# பிராய்லர் குழந்தைகள்



பாலாஜி சுதந்திரராஜன்
மன்னார்குடி

''என்னப்பா இது தலைப்பு'' என்று கேட்கிறீர்களா..?
பதில் தலைப்பிலயே இருக்கிறது.
இன்னொரு முறைப் படித்து பாருங்கள்.
இப்போது புரிகிறதா.?

அதே தான்.

இன்று எப்படி மாமிசத்துக்காக கோழிகள் வளர்க்கப்படுகிறதோ அதே முறையில் தான் நம் குழந்தைகளையும் வளர்த்து வருகிறோம்.

இயற்கையாக வளர்ந்த குழந்தைகளை ஊட்டச்சத்து என்னும் பெயரில் 'பூஸ்ட்' 'ஹார்லிக்ஸ்'னு கொடுத்து வளர்க்கிறோம். கோழிகளுக்கு ரசாயன தீவனம் கொடுத்து வளர்ப்பது எப்படியோ அதே முறை தான் இதுவும்.

ஒரு கோழிக்குஞ்சு தீவனத்தை சாப்பிட ஆரம்பித்த 45 நாளில் கோழியாக வளர்ந்து நிற்கிறது. அபாரமான வளர்ச்சி தான் அதில் மறுப்பு எதுவும் இல்லை.

அந்த கோழியை சாப்பிடும் நாமும் வளர்கிறோம் கோழியை போல வெகு விரைவாக. 60 வயதில் எட்டி பார்க்க வேண்டிய முதுமையெல்லாம் இன்று 20ல் எட்டி பார்க்கிறது.

ஆமாங்க 45 வயதில் வந்த நரைமுடி இன்று 15 வயது பசங்களுக்கு வருகிறது. 16 வயதில் பருவம் அடைந்த பெண்கள் இன்று 8-9 வயதில் பருவம் அடைகிறார்கள். எல்லாம் இன்றைய (அ)நாகரீக உணவுமுறை தான் காரணம்.

இது மட்டுமில்லை அந்த கோழிகள் எல்லாம் எப்படி 45 நாள் வரைக்கும் கூண்டிற்குள்ளயே அடைத்து வளர்க்கிறார்களோ அது மாதிரி தான் நாம் நம்ம குழந்தைகளையும் வீட்டை விட்டு வெளியில் விடுவது இல்லை.

கூண்டை திறந்துவிட்டால் கூட அவைகளுக்கு பறந்து தற்காத்துக்கொள்ளாது.

அதே போல தான் விளையாட வேண்டிய வயதில் குழந்தைகளை அடைத்து வைப்பதால் உடல் வலிமையற்று போகிறார்கள்.

ஓடி ஆடி விளையாடினால் தானே ஆரோக்கியமாக இருப்பார்கள்?

இது போதாதென்று இன்று 2 வயது ஆவதற்குள்ளேயே அவர்கள் கைகளில் அலைபேசியை

கொடுத்து அவர்களை இயக்க சொல்லி நாம் பெருமிதம் கொள்வதை எப்படி எடுத்துக்கொள்வது என்று தெரியவில்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால், சொந்த பந்த உறவுமுறைகளைக்கூட ஒழுங்காக சொல்லிக்கொடுப்பது இல்லை.

அத்தை மகளை அக்கா என்றும், மாமன் மகனை அண்ணன் என்றும் சொல்லிக் கொடுப்பது உறவுமுறைகளை சிதைக்கும் செயல் தான்.

பள்ளி செல்லும் குழந்தைகள் நிலை மிகவும் கொடுமை.

பள்ளியில் படிக்க வேண்டும், வந்து சிறப்பு வகுப்பிற்கு சென்று படிக்க வேண்டும், வீட்டிற்கு வந்தும் படிக்க வேண்டும். அவர்களை பிழிந்து ஒரு வெறுப்புணர்வை ஏற்படுத்திவிடுகிறோம். வீட்டிலாவது சற்று ஓய்வு கொடுங்கள் அவர்கள் இயந்திரங்கள் அல்ல.

குழந்தையை வெளியில் பழக விட்டால் கெட்டு போய்விடுவார்கள் என்ற எண்ணமும் இன்றும் இருக்கிறது.

அதனால் குழந்தைகள் கேட்டதை வாங்கி கொடுப்பதும் அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பது மட்டும் தான் நல்ல வளர்ப்பு என்று நெஞ்சை நிமிர்த்த வேண்டாம்.

சற்று இலகுவோம்.

குழந்தைகளுக்கு இயல்பான உணவு முறைகளை கற்றுக்கொடுங்கள்.

விளையாட வேண்டிய வயதில் கைப்பேசியை கொடுத்து வீட்டுல் அடைக்காமல் நண்பர்களோடு விளையாட விடுங்கள்.

வெளியில் செல்வது விளையாட மட்டும் அல்ல நட்பை வளர்க்கவும் தான். மேலும் பல சூழ்நிலைகளை சமாளிக்களிக்கவும் கையாளவும் கற்றுக்கொள்ளவும் செய்வார்கள். அது தான் அவர்களின் தன்னம்பிக்கைக்கு வித்தாக அமையும்.

சொந்த பந்தங்களை அறிமுகப்படுத்தி உறவுமுறைகளை கற்றுக்கொடுங்கள். இயல்பாக வளர்வார்கள்.

படிப்பதற்கு தான் இரு இடங்கள் இருக்கிறதே வீட்டில் வேறு ஏதாவது கற்பியுங்கள். அல்லது அவர்கள் ஆர்வம் சார்ந்த செயல்களில் ஈடுபட செய்யுங்கள்.

நல்வழி படுத்துவதுதானே பெற்றோர்களின் கடமை.
நல்லதை சொல்லிக்கொடுத்து நல்வழி படுத்துங்கள்.

நம் வீட்டில் வளர்க்கும் நாட்டு கோழி தன்னையும் தன் குஞ்சுகளை காத்து வளர்க்கிறது.


ஆனால், பிராய்லர்களுக்கு அடைக்காப்பது என்றால் என்னவென்று கூட தெரியாது.

ஆதலால் நம் குழந்தைகளை இனியும் பிராய்லர் வாழ்வியலில் இருந்து விலக்கு அளித்து ஆரோக்கியமான இயல்பான வாழ்கைக்கு அடித்தளம் அமைத்து தருவோம்.


வேறொரு தலைப்புடன் அடுத்த இதழில் சந்திக்கிறேன்.

நன்றி.

- பாலாஜி சுதந்திரராஜன்
மன்னார்குடி



V.S. தவனேஷ்
கைவண்ணத்தில்



# சிறு பேராசை

கண்டுகொண்டது முதலே கள்ளம் தீர்த்தது முடிய
காதல் தரிக்க வேண்டும்.

காதலுக்கு கண்ணில்லை என்றாலும் என் காதலை
உன் கண்ணிலே காண வேண்டும்.

காமமும் கண்மூடிடும் பொழுதே என்
காதலை கண்டு கொள்ள வேண்டும்.

கடத்தி செல்லும் காவலுக்கு உன்
காதலே பூட்டாக வேண்டும்.

தனிமை தீண்டினாலும் கண்ணீரிலே கல்லாய்
காதல் உறைய வேண்டும்.

தனித்தே விட்டுச்சென்றாலும் தாரமாய் தவமிருப்பேன்
என் காதல் கொண்டு வர வேண்டும்.

தவம் கொண்டு பெற்றதுபோலெ நல் காதலின்
கருவை நெஞ்சிலே சுமக்க வேண்டும்.

நீ மட்டுமே வேண்டும்!
இது என் பேராசைதான் ஆனாலும்
என் கவிதையும் வேண்டுமென
அடம்பிடிக்கிறது என் காதலுக்காக.

R. **கிர்த்திகா,** B.Arch,
ப்ரைம் கட்டிட எழில் கலைக்கல்லூரி,
கீவளுர்

# நதிநீர் இணைப்பு சாத்தியமா ??



மனோ குணசேகரன்

மிக பெரிய கேள்விக்குறியுடன் தொடங்குகிறேன்.

இது முற்றிலும் இயற்கைக்கு முரணானது. இதன் சாத்தியக்கூறுகளை அறியாத அரசியல்வாதிகளை வைத்து நம் முன் வைக்கப்படும் இந்த திட்டம் உண்மையில் செயல்படுத்த முடியுமா? இதற்கான நிதி செலவு எவ்வளவு ஆகும்? அனைத்து மாநிலங்களும் ஒப்புக்கொள்ளுமா? நம் பக்கத்து மாநிலமே நமக்கு கொடுக்க வேண்டிய தண்ணீரை தருவதில் பல பிரச்சனைகள் உள்ளது. உச்ச நீதிமன்ற தீர்ப்புகளையே அவர்கள் மதிப்பது இல்லை.

இதில் வட இந்தியனா தர போகிறான்? கண்கட்டி வித்தையை விரிவாக பார்க்கலாம் வாங்க.

நதி ஆனது ஒடும் பாதையில் ஓடி கடைமடை சென்று கடலில் கலக்க வேண்டும், இது இயற்கை நீதி.

முதலில் இதற்கான நிதி செலவுகளை பார்ப்போம்.

2002 ஆய்வின் படி 2 லட்சம் கோடி என்று சொன்னார்கள். இன்று 20 லட்சம் கோடி ஆகும் என்கிறார்கள். அப்படி நடைமுறைக்கு வரும் போது, செயல்படுத்தும் போது, பிறகு பராமரிப்பு என ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு 2 லட்சம் கோடி என்கிறார்கள் என்னும் போதே தலை சுற்றுகிறது.

இந்த செலவுகள் அனைத்தையும் அரசாங்கம் செய்யும் என எண்ணுகிறீர்களா, நிச்சயம் இல்லை.

இது தனியாரிடம் கொடுக்கப்படும். குறிப்பாக பன்னாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்யும். அப்படியானால் இது எப்படி மக்களுக்கு பயனுள்ளதாக அமையும்? குறைந்த முதலீட்டில் அமைக்கப்பட்ட நான்கு வழிச்சாலையை நாம் பயன்படுத்த சுங்கசாவடிகள் வைத்து மக்களிடம் இருந்து சுரண்டுகிறார்கள் இப்படி இருக்க.

இவ்வளவு பெரிய முதலீடு என்றால் எப்படி சுரண்டுவார்கள்? எத்தனை ஆண்டுகாலம் சுரண்டுவார்கள்? கணக்கு இல்லை, இயற்கையாக வரும் தண்ணீராக இருந்தாலும் சரி, மழை பெய்து ஆற்றில் வரும் தண்ணீராக இருந்தாலும் சரி, கட்டணம் செலுத்தியே பெறமுடியும் என்ற நிலை வரும்.

அப்படி இருக்கும் பட்சத்தில் நாம் எப்படி விவசாயத்திற்கு பயன்படுத்த இயலும்? தண்ணீர் தனியார்மயம் ஆவது என்பது மறு காலனியாக்கத்தின் கோர வடிவம்.

நதிகளை இணைக்க அந்தந்த மாநில அரசு மற்றும் மக்கள் ஒத்து வருவார்களா, இது எப்படி சாத்தியமாகும்??

இவர்கள் சொல்லும் திட்டம், இமயமலைப் பகுதியில் பாயும் 14 ஆறுகள், தீபகற்பத்தில் பாயும் 16 ஆறுகள் என 30 நதிகளை இணைக்க உள்ளார்கள். இணைப்பதற்கு 15,000 கிலோ மீட்டர் நீளத்துக்குக் கால்வாய்களை வெட்ட வேண்டும். நீர்நிலைகள் அமைக்க 27.66 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் நீரில் மூழ்க வேண்டும். இதனால் அப்பகுதிகளில் வசிக்கும் சுமார் 15 லட்சம் மக்கள் வேறு இடங்களுக்கு குடி அமர வைக்க வேண்டும்.

இப்படி இருக்க அம்மக்களை எங்கு மறு குடியேற்றம் செய்வார்கள்? எவ்வாறான இழப்பீடு கொடுப்பார்கள்? இதெல்லாம் கேள்வி குறிதான். ஏன் என்றால் இதற்கு முன் அரசு கையகப்படுத்திய நிலங்களுக்கு சரியான இழப்பீடு மற்றும் இடங்கள் கொடுத்தார்களா? இல்லை, பரிதாபமான நிலையில் தான் உள்ளனர் இதற்கு முன் இடம் கொடுத்தவர்கள்.

உதாரணமாக NLC, ONGC போன்ற நிறுவனங்களுக்கு இடம் கொடுத்த மக்களின் நிலையை போய் பார்த்தால் தெரியும் ஏன் மேட்டூர் அணைக்கட்ட இடம் கொடுத்தவர்கள் இன்றும் கர்நாடக வனபகுதியில் தான் வாழ்ந்து வருகிறார்கள்.

அதேபோல் குசராத்தில் கட்டப்பட்ட 13 மீட்டர் உயரமுள்ள அணை, மொத்தம் 244 கிராமங்களை மூழ்கடித்துவிட்டுத் தண்ணீரைத் தேக்கி வைத்துள்ளது. ஆனால், இந்த நீரை ஒரு விவசாயி கூட பாசனத்துக்காக உபயோகப்படுத்த முடியவில்லை. இந்த அணையை நிரப்ப வேண்டும் என்று நர்மதை திசை திருப்பப்பட்டதால் மத்தியப் பிரதேசத்தில் 37 மாவட்டங்களும், மகாராஷ்டிராவில் 17 மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

இன்னொரு பக்கம் பாதிக்கப்பட்ட பழங்குடி மக்களுக்கு இன்னும் புனர்வாழ்விற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இப்படி அரசுகளின் நடவடிக்கைகள் இருக்க அம்மக்கள் எப்படி ஒத்து வருவார்கள்?

சூழலியலை பார்ப்போம்.

நாம் நினைப்பதுபோல் இணைத்துக் கொள்ள நதிகள் ஒன்றும் தண்ணீர் குழாய்கள் அல்ல. அவை ஒரு சூழல் மண்டலம், கலாச்சார, பண்பாட்டின் அடையாளம். நதிகள் இந்த பூமிக்கு மிகப்பெரிய சூழல் சேவைகளை (Eco System Services) ஆற்றி வருகின்றன.

நதிகள் சென்று கடலில் கலப்பது நதியின் உரிமை. இது நதிகளின் நன்மைக்காக மட்டுமில்லை. இந்த பூமியில் உயிர்கள் தழைத்து வாழ வேண்டுமென்றால், நதிகள் கடல் உயிருடன் இருக்க வேண்டுமென்றால் நதிகள் அதன் இயல்பில் கடலில் கலக்க வேண்டும். அதை தடுத்தால் கடல் மரணித்துவிடும். அதற்கு நம் சமகால உதாரணம் ‘Dead Sea’. ஜோர்டான் நதியை கடலில் கலக்க விடாமல் செய்ததுதான் அந்த கடல் மெல்ல இறக்க காரணம். நதிகள் கடலில் கலப்பதுதான் ஒரே வழி. இது சூழல் அறிஞர்கள் நமக்கு கூறுவது.

அதேபோல நதிகள் கடலில் கலந்தால் தான் அதை சார்துள்ள உயிரினங்கள் வாழும். அதாவது நன்னீர் ஆனது கடலில் கலக்கும் இடத்தில் தான் மீன்கள் குஞ்சு பொறிக்கும்.

அதை அடுத்தே கடல் சார் உயிரினங்கள் வாழ வழிவகுக்கும். நமக்கு பிராண வாயு கடல் வாழ் உயிரினங்களால் தான் 60 சதவிகிதம் கிடைக்கின்றது என்பதை கவனத்தில் கொள்க, அதே போல் நதியும் கடலும் சேரும் அந்த பகுதியில்தான் அலையாத்தி காடுகள் உண்டாகும்.

அதே போல் ஒரு நதி ஒரு நிலப்பரப்பில் ஓடுகிறது என்றால் அந்த பகுதியில் அதற்கான உயிரினங்களும் தாவரங்களும் உருவாகி இருக்கும். இது இயற்கையான ஒன்று. ஆறு என்றால் அதில் வெள்ளம் வர வேண்டும். வந்தால் தான் அது ஓடும், பாதை பகுதிகள் செழிக்கும். கடைமடை பகுதி முழுவதும் வண்டல் மண் உருவாகும். இது அந்த பகுதியை செழுமையாக்க இயற்கையான சுழற்சி முறை. சரி தன் போக்கில் ஓடும் நதியை தடுத்து திருப்பி விடுவது நடைமுறையில் சாத்தியம் என்றாலும் அதன் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதா அரசு தரப்பில் இருந்து இதுவரை?

நதிகளை நம் கட்டுபாட்டுக்குள் கொண்டு வர இயலுமா? நிறைய அணைகள் உருவாக்க உள்ளனர். வல்லுநர்கள் பலரும் கூறுவது நீர் பெருமளவு தேக்கி வைக்கும் அணைகள் கொடுக்கும் அழுத்தம் காரணமாகவே பூமி பிளவுற்று அதிக நிலநடுக்கம் வருவதாக கூறுகின்றனர்.

அப்படி நில அதிர்வு ஏற்படுத்தும் நதிகளோ அணைகளோ உடைந்தால் அதன் விளைவுகளை நம்மால் சந்திக்க இயலுமா? சரி இவ்வாறு அணைகளையும் உருவாக்க எத்தனை கிராமங்களை பலிக்கொடுப்பது. ஒரு பகுதி மக்கள் வாழ, அப்பகுதி மக்களின் வாழ்வாதரங்களை அழிப்பது என்ன பண்பு? அதேபோல் பருவநிலை மாற்றங்களை கணக்கில் கொள்ள வேண்டி உள்ளது இதெல்லாம் இந்த அரசுகளுக்கு கவலை இல்லை.

இதை செயல்படுத்தினால் கோடிக்கணக்கில் பன்னாட்டு நிறுவனங்களில் இருந்து முறைகேடாக பணம் பெறலாம், ஊழல் செய்யலாம் என்ற நோக்கதிலே செயல்படுகிறது. இயற்கையை எதிர்த்து நம்மால் என்ன செய்ய இயலும்?

இந்தியாவில் சில நதிகளில் மிகவும் செழிப்பாக வருடம் முழுவதும் தண்ணீர் இருக்கிறது. சில நதிகளில் பருவகாலத்தில் மட்டும் தண்ணீர் இருக்கிறது. இந்த இரண்டையும் இணைக்கும் போது, அனைத்து நதிகளிலும் வருடம் முழுவதும் தண்ணீர் இருக்க செய்து விட முடியும். அதனால் நமது விவசாய பரப்பு 175 மில்லியன் ஹெக்டேர் அளவிற்கு விரிவடையும், 34000 மெகாவாட் புனல் மின்சாரம் தயாரிக்க முடியும். இவ்வாறு அரசு கூறுகிறது. ஆனால், இந்த அடிப்படை புரிதலே தவறு என்கிறார் இந்திய நீர் நிலைகள் குறித்து ஆராய்ச்சி செய்து வரும் டெல்லி ஐஐடி பேராசிரியர் கோசைன்.

இப்பொழுது இயற்கையை எதிர்க்க துணிந்துவிட்டார்கள். நாம் தான் விழிப்புடன் ஆராய்ந்து செயல்பட வேண்டும். அதற்கான தீர்வை நோக்கி நகர வேண்டும். நம் நீர் பிரச்னைக்கு தீர்வு என்ன??

சர்வதேச நதிநீர்ப் பங்கீட்டு விதிகளின்படி (ஹெல்சின்கி விதிகள்), காவிரி நதியில் தமிழகத்திற்குள்ள உரிமை ‘‘நீர்வழிப் பாதை உரிமை’’ (Lower Riparian Rights). இப்படி தமிழகத்துக்கு முழு உரிமையுள்ள காவிரியிலிருந்து நியாயமாக வழங்க வேண்டிய நீரை

வழங்காமல் கர்நாடகம் மறுத்து வருகிறது. அரசு அரசியல் செய்கின்றது அதை வைத்து அதை உடைத்து நாம் அனைவரும் ஒற்றுமையுடன் நின்று போராடி கேட்டு பெறுவோம்.

அரசு, பெரிய அணைகள், நதிகள் இணைப்பு ஆகியவற்றுக்காக திட்டமிடும் பணத்தில் பத்து சதவீதத்தைக் கொண்டே, நம் அனைத்து குளங்கள், ஏரிகளையும் மீட்டுவிட முடியும் மற்றும் ஆயிரக்கணக்கில் புதிய ஏரிகள் குளங்களை உருவாக்க முடியும். அதன் மூலம் அந்தந்த பகுதியில் நீர் வளம் பெருகும். அந்த பகுதி பிரச்சனை அந்த பகுதியிலேயே தீர்க்கப்படும்.

எங்கு தொலைக்கின்றோமோ அங்குதான் தேடவேண்டும் ஒரு இடத்தில் தண்ணீர் சிக்கலென்றால், அதே இடத்தில் அதிக நீர் நிலைகளை உண்டாக்கி தீர்க்க வேண்டுமே தவிர, இன்னொரு இடத்திலிந்து நீர் எடுக்க வேண்டும் என்று நினைப்பது எப்படியான வழிமுறை இது எப்படி சாத்தியம். இது சிக்கலை மேலும் மேலும் அதிகமாக்குமே தவிர, நிரந்தர தீர்வை தராது.

நாம் வசிக்கும் பகுதியில் இருக்கும் குளங்கள், ஏரிகள், ஆறுகள், வடிகால் வாய்க்கால்கள் என இவைகளை மீட்டு புனரமைத்து புதுப்பித்தாலே போதும். இதை யார் செய்வது நாமே செய்வோம், பல இளைஞர்கள் இவற்றை மீட்க களம் இறங்கிவிட்டனர்.

நாமும் இணைவோம். மாற்றம் நம்மில் இருந்தே தொடங்கட்டும். நம்மை கண்டு அரசுகளும் வரும். வந்துதானே ஆக வேண்டும்.

தீர்வை நோக்கி பயணிப்போம், யாருக்கும் பாதிக்காத வண்ணம்.

இவர்களின் செயலில் நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான ஒன்று, நாட்டின் பிரதமர் முதல், மாநிலத்தின் முதலமைச்சர், இன்னும் பிற அமைச்சர்கள் என்று அனைவரும் நாட்டின் அனைத்து ஆறுகளையும் இணைக்க வேண்டும் என்று குரல் எழுப்புகிறார்கள். செயல்படுத்த வேண்டியவர்கள், அதிகாரத்தை தங்கள் கைவசம் வைத்துள்ளவர்கள் யாரிடம் கோரிக்கை வைக்கிறார்கள் என்று நாம் சிந்தித்தால் அனைத்திற்கும் விடை கிடைக்கும்.

வாழ்க தமிழ் வெல்க தமிழ்.

**- மனோ குணசேகரன்**
புள்ளவராயன் குடிகாடு

# இன்றைய விவசாயம் நாளைய பாதிப்பு

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

என்ற வள்ளுவனின் குறளுக்கேற்ப நன்றாக உழுது எரு இட்டு களை பறித்து விளைச்சலை முன்னேற்றி விவசாயத்தை பெருக்கினான் விவசாயி. தன்னால் விளைவித்த பொருட்களை கொண்டு விழா தொடுத்தான். உடன் பிறந்தவர்களுக்கும் சீர் கொடுத்து மகிழ்ந்தான் தனக்கு உதவியாய் இருந்த கால்நடைகளுக்கும் விழா எடுத்தான். அது தானோ பொங்கல் !!!!!

சாணிபால் மிதித்த பின்னால் தான் வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டும் என்ற வழக்கம் இன்றும் உள்ளது.

ஆனால் தற்போது உரமிடுகிறேன் உரமிடுகிறேன் என்று ரசாயன உரத்தை கொட்டி கொட்டி பூமித்தாயும் தற்போது மலடியாய் மாறிவிட்டால்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

என்று அந்த காலத்திலேயே வள்ளுவன் விவசாயிகளுக்குத்தான் முன்னுரிமை கொடுத்து இருக்கிறார். மற்றவர்கள் எல்லாம் விவசாயியை வணங்கி அவன் பின்னால் தான் செல்ல வேண்டும் என்று அருமையாக சொல்லி இருக்கிறார்.

ஆனால் தற்போது நிலைமை ?????

தற்போது எல்லாமே இயந்திரமயமாக மாறி விட்டது. அனைத்திற்கும் இயந்திரம் என்ற மூட நம்பிக்கையில் மூழ்கி விட்டோம். விவசாயம் துவங்கும் முதல் கடைசி வரை இயந்திரம்... வள்ளுவன் மட்டும் தற்போது உயிரோடு இருந்திருந்தால்.

இயந்திரத்தால் விதைத்து இயந்திரத்தால் நடவுசெய்து
இயந்திரத்தால்அறுவடை முடிந்துவிட்டதாம் விவசாயம்.

என்று இப்படிதான் ஒரு குறளை எழுதி இருப்பார்.

இரசாயன உரத்தை தவிர்த்து இயற்கை உரங்களை பயன்படுத்துங்கள் இப்படியே சென்றால் நம் சந்ததியினருக்கு விவசாயம் என்ற வார்த்தை கூட தெரியாமல் போய் விடும்.

**- சீதாரம் சங்கர்**
B.SC., M.T.T.M., D.C.F.A., D.Q.M.,

# வழி தெரியாமல் சென்றவனின் வாழ்க்கை குறிப்புகள்

தைப்புரட்சி என்பது தமிழகம் வெகுண்டெழுந்த காலம் என இருமாப்போடு பேச எனக்கு மனம் வரவில்லை. ஏனெனில் நம் உரிமையினை மீட்டு எடுக்க எத்தனையோ இன்னல்களை பலர் சந்தித்தனர், ஜல்லிக்கட்டும் நடைபெற்றது.

சில நாளில் காவிரி பிரச்சினை, மீத்தேனை ஹைட்ரோகார்பன் என பெயர் வைத்து நெடுவாசல் கிராமத்தை குறி வைத்தது நிறுவனம். அப்போது முகநூல் படங்களை மாற்றி ஜல்லிக்கட்டை மீட்டெடுத்தோம், இதையும் எடுப்போம் என வெகுண்டெழுந்து கரைந்துபோய் விரக்தியில் இருந்தவர் பலர்.

(அதில் நானும் ஒருவனே)

ஜல்லிக்கட்டு என்பது இந்திய விலங்குகள் நலவாரியமும் பீட்டாவும் தடை செய்த ஒன்று. இதை நம் அரசு அவசர சட்டம் இயற்றி நடத்தியது அனைவரும் அறிந்த ஒன்று.

ஆனால் ஹைட்ரோகார்பன் கெயில் குழாய் போன்றவை மத்திய அரசின் வருவாய் குறித்த ஒன்று. எனவே கவனமாய் கையாண்டு இருந்தால் கேரள அரசு கைவிட்டது போல் தமிழகத்திலும் நடைபெற்றிருக்க வாய்ப்பு இருந்திருக்கும். யாரை எதிர்க்கிறோம் என்பதை முதலில் நன்றாக புரிதல் அவசியம் இல்லையேல் வாழ்க்கை சின்னா பிண்ணாமாய் தெரித்து விடும் என்பதை சில கற்று உணர்ந்தவரின் அனுபவங்களில் உணர்ந்தேன்.

எப்போதும் போராட்டம் கைது உண்ணாவிரதம் புரட்சி என பரப்பாக வைத்து இருப்பதில் ஊடகங்களின் பங்கு அளப்பரியது. அதை கண்டும் காணாமல் தங்கள் குடும்பங்களின் வாழ்கையை உற்சாகமாக வைத்திருங்கள். எப்போதும் ஒரு அழுத்தமாக இருக்கும் மனநிலையினை கலைந்து ஒவ்வொரு நொடியினையும் உற்சாகமாய் கழியுங்கள்.

மேற்கோள் காட்டபட்டுள்ள பிரச்சனை பல வருடங்களாய் நடப்பது அதை களைய நம் அதற்கான தகுதி உடையவனாய் மாற்றி கொள்வதே புத்திசாலித்தனம். பிஞ்சு நெஞ்சகளில் விவசாயத்தையும் அரசியலையும் தெளிவுற கற்றுக்கொடுங்கள் அரசு வேலையின் முக்கியதுவத்தை உணர்த்துங்கள்.

பாரம்பரியம், கலாச்சரம் இவற்றையும் நம்மால் மாற்ற முடியாத சமுதாயத்தை நாளை உங்கள் குழந்தைகளோ, உடன்பிறப்புகளோ மாற்றலாம்.

- பிரித்திவிராஜ்
களிச்சாங்கோட்டை

# யாருக்கும் நேரமில்லை

காலையில் எழுந்து அரக்க பறக்க சாப்பிட்டு வேலைக்கு சென்று அங்கும் நிலைக்கொள்ளாமல் கடமையே என்று வேலை செய்து, அலைப்பேசியில் வரும் குறுஞ்செய்திகளுக்கும் முகநூலில் வரும் தகவல்களுக்கும் கருத்து தெரிவித்துக்கொண்டும் அன்று நம்மை பாதிக்கும் விஷயத்தை தன்னுடைய பதிவாக எழுதியும் அன்றைய நாளை முடித்துக்கொள்கிறோம்.

நமக்கானவர்களோடு உரையாட மறந்து எந்திரத்தனமான வாழ்வியல் தேவை தானா? காலில் சக்கரத்தைக் கட்டிக்கொண்டு இப்படி நாம் எதைநோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம் என்று எத்தனை பேருக்கு தெரியும்? ஓர் நொடியாவது யோசித்தது உண்டா?? தேவைகளுக்காக ஓடுகிறோம் என்று சொன்னால் உங்கள் தேவை உங்கள் ஆசையின் வெளிப்பாடு. உங்கள் ஆசை ஓர் தேவை முடிந்ததும் அடங்கி விடுமா? இறக்கும் வரை ஆசைகள் இருக்கும்.

ஆசை இல்லாதவன் இவ்வுலகில் இல்லை. புத்தரைக் கைகாட்டலாம், ஆசைகளை துறந்த மனிதர் என்று! என்னை பொறுத்தவரை அவர் தான் பேராசைக்காரர். எப்படியேனும் கடவுளை சென்ற அடைந்திட வேண்டும் என்று எண்ணங்களை ஒரு நிலைப்படுத்தி அதில் வெற்றியும் கண்டவர். அவரின் ஆசை நிலையானது.

இதுதான் என் ஆசை என்று ஓர் மையப்புள்ளியில் தன் நோக்கத்தை வைத்தவர். ஆனால் தன்னைத்தானே கேள்வி கேட்க மறந்து வெந்ததை தின்று வாழும் மனிதர்களை போல நாம் இயங்கி கொண்டிருக்கிறோம். போகிறப்போக்கில் வாழ்ந்து மடிவதில்லை நம் வாழ்க்கை.

நாம் யார் என்று அடுத்த தலைமுறைக்கு ஆவது தெரியவைத்துவிட்டு செல்வது தான் வாழ்க்கை. நம்மைச்சுற்றி நடக்கும் கொல்லை; கொலைகள்; சாதி மத வெறி; சுகாதாரமின்மை; நேரமின்மை இதை எல்லாம் அடுத்து வரும் தலைமுறைக்கு நாம் சொல்லித் தர போகிறோமா? நமக்கு ஏன் வீண்வம்பு என்று கடந்து செல்கிறோம். நமக்கு நடக்கையில் அடுத்தவர்களும் அப்படித்தானே கடந்து செல்வார்கள் என்பதை மறந்து....

சமூக மாற்றத்தை வீட்டிலிருந்து கொண்டு வாருங்கள். விவாதியுங்கள் குறைந்தபட்சம் உங்களை நேர்மைப்படுத்தி உங்கள் தெருக்களை சுகாதாரத்தோடும் அருகில் உள்ளவர்களோடும் பேசி அன்பு பாராட்டி அந்த கிராமங்களை சரி செய்யுங்கள். உங்கள் கிராமங்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி அதில் உங்கள் கிராமத்தினருக்கு வேலை கொடுங்கள்.

உங்கள் ஆசைகளையும் சிந்தனைகளையும் சமூக மாற்றத்தோடு ஓர் மையப்புள்ளியில் வையுங்கள். இது எப்படி சாத்தியம் என்று கேட்பவர்களுக்கு அன்பை விதையுங்கள். அன்பு என்னும் ஆயுதத்தைவிட வலிமையான ஆயுதம் வேறு ஒன்றும் இல்லை. அதை உணர்ந்து கைக்கோர்த்து வெற்றிக்கொள்ள இங்கு யாருக்கும் நேரமில்லை!...

**- கண்ணம்மா**
உள்ளிக்கோட்டை.



ராஜேஷ்,
மன்னை

முளை விடும் மொட்டை பூவாக்கி
அது பூக்கும் பருவத்தில்
அதை கருக்கும் முக்கிய காரணி

விளங்கவில்லை எனில்
ஆறே வயதில் பூப்பெய்தி

ஆயுள் முழுக்க அவள்படும்
அவதிக்கு முக்கிய காரணி

ஆண்களின் ஆதாரத்தையே
அழிக்க பார்க்கும் அசைவம்

மலடாக்கும் மலிவு விலை மாமிசம்
பஞ்சு போல மிருதுவாக
நஞ்சாய் உள்ளிறங்கும்.

இரக்கமற்ற இறைச்சி பிழை
பிராய்லர் கோழி..

கடமையை செய்ய கையூட்டா என
கதறும் கணவான்களே..

வாக்கு செலுத்துவது உன் கடமை
அதற்கு நீ
வாங்கியதின் பெயரென்ன?

அகிலத்து அழுக்குக்களின் மறுபெயர்
அரசியல் எனில்

அதன் ஆக்கம் நீயும் நானும்
காசுக்கு
ஆற்றிய கடமை என கொள்.

பணமென்னும் தீரா நஞ்சு கலந்த
வஞ்சம்கொண்டு
வாரிசுருட்டிய தமிழகத்தில்

எஞ்சி இருப்பது இடுப்பு
வேட்டியே..
அதையும் அவிழ்க்க
இருப்பதே அடுத்த இலக்கு....

# மரம் உணர்த்தியது மனிதன் உணராதது

நீ வீழ்த்தினாலும் மீண்டும் வளருவேன் என்கிறது மரம்,
நீ வீழ்ந்தால் தான் நான் வளர முடியும் என்கிறான் மனிதன்,

மரத்தை வெட்டினான், காற்றை இழந்தான்,
மழையை இழந்தான்

இறுதியாக
தன்னையே இழந்தான்.
அவனை எரிக்கவும் மரம்தான் தேவைப்பட்டது.

மரமே ஜெயித்தது.
மரத்தை வெட்டினால் அதுவே நம்மை எரித்துவிடும்

- சாலினி நெல்சன்
மன்னார்குடி

# நட்பு



ஜெ.ஜவஹர்
மன்னார்குடி

நட்பு இருந்தால் இமயத்தையும்
அடைய முடியும் என்று சொல்வார்கள்

நான் ஒரு இடத்தில் விழுந்த போது
என் நட்பு என்னை தூக்கியது...

ஆனால் சில நட்பு
என்னை விழவும் செய்தது...

ஆனால் நாம் அவர்களை
எதிரியாக பார்க்காமல்

நாம் எப்போதும் அவனுக்கு
நண்பனாக இருந்தால்
விழ செய்த அதே நட்பு
என்னை ஒரு நாள் அணைக்கும்

# மண்ணே போச்சு



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

மண்ணா போச்சுன்னு சொல்லி தான் நாம நிறைய பேர் சொல்ல கேட்டு இருக்கோம்.விலை மதிப்பிலாத ஒரு பொருள் ஒன்றும் இல்லாமல் போவதை தான் மண்ணா போச்சுன்னு சொல்வாங்க. உண்மையிலே மண் என்பது அப்படி ஒன்றுக்கும் உதவாத விடயமா?

இல்லை, எவ்வளவு விலை கொடுத்தாலும் கிடைப்பதற்கு அரிய விடயமாக மண் மாறும் காலம் வெகு தொலைவில் இல்லை.

ஆமாம் ''மணல் கொள்ளை'' தான் இன்றைய தலைப்பு.

மழை நீர் அருவி வழியாக குதித்து பின் தன் கடல் காதலனை சேரப் போகும் மன மகிழ்ச்சியில் துள்ளி குதித்து ஓடும் பாதையே ஆறு.

அவ்வாறு துள்ளி குதித்து ஓடும் போது பாறைகள் பிளவுப்பட்டு பொடியாகி உருவாகுவதே ''மணல்'' என்னும் அரிய பொக்கிசம். மணல் இயற்கை நமக்கு அளித்த பெரும் கொடை. இதன் பயன் மகத்தானது.ஆற்று நீருக்கும் நிலத்தடி நீருக்கும் இடையே ஒரு இணைப்பு பாலமாக ஒரு வடி கட்டியாக செயல் படுகிறது.

அதாவது ஆற்று நீரை வெகுவாக உறிஞ்சு அதை வடிகட்டி பூமிக்குள் அனுப்புகிறது இதனால் பெருமளவு நிலத்தடி நீர் மட்டம் உயர்வதோடு மட்டுமல்லாமல் அதை நன்னீராகவும் மாற்றுகிறது.

அதனால் தான் ஆற்று கரையோரம் நிலத்தடி நீர் மட்டம் நன்றாகவும் கடின நீரின் அளவு வெகுவாக குறைந்து நன்னீர் அதிகமாகவும் கிடைக்கிறது. அதிக வேகத்தோடு வரும் ஆற்று நீரை வெகுவாக உறிஞ்சு பூமிக்குள் அனுப்பும் வேலையை செய்வது மணலே..அப்படி மணல் இல்லை என்றால் ஆற்று நீர் கடலில் தான் அதிகம் கலக்கும்.பூமிக்குள் போகும் நீர் குறைந்து சுற்று சூழல் பேரழிவு (ecological disaster) நிகழும்.

இப்படி அரிய பயன்கள் கொண்ட மணல் எப்படி களவு போகிறது என்பதை பார்ப்போம்.இயற்கை அளித்த கொடையாம் இந்த மணலை மனிதன் தனக்கு சாதகமாக கட்டுமான தொழிலுக்கு பயன்படுத்தி கொள்கிறான். ஆகவே இன்று மணல் மனிதனுக்கு மிக மிக அவசியம் ஆகிறது. உணவு உடை உறைவிடம் என்ற அத்திவாசிய அடிப்படை தேவைகளில் ஒன்றான உறைவிடம் அமைக்க மணலின் தேவை இன்றியமையாதது. எனவே தினமும் மணல் ஆனது பயன்படும் ஒரு பொருளாக மாறி விட்டது.

தவிர்க்க முடியாதது தான். கட்டு மான பணிகளுக்கு பயன்படும் சிமெண்ட், செங்கல் போன்றவை இயற்கையில் கிடைக்கும் பொருட்களை வைத்து செயற்கை முறையில் தயாரிக்கப்படுகிறது. மாறாக மணல் என்பது முழுதும் இயற்கையில் கிடைப்பதை வைத்தே பயன்படுத்துகிறது.

மேலோட்டமாக பார்த்தால் இது தவிர்க்க முடியாத ஒன்றாக போலவும், இதில் என்ன தவறு என்பது போலத் தான் தோன்றும். இரத்தம் என்பது அரிய விடயம் தான். அதை தானம் கொடுப்பது என்ன தவறு இருக்க முடியும்? சரி தானே.
ஆனால் ஒருவர் நினைத்தாலும் ஒரு அளவுக்கு மேல் ரத்தம் கொடுக்க முடியாது. அது ஏன்? அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.

அளவு என்பது அவசியம்.குறிப்பிட்ட அளவுக்கு மேல் எடுப்பது சட்ட விரோதம். அதுவே திருட்டு.

மணல் எடுப்பதில் அரசு சில விதி முறைகளை அமைத்து உள்ளது. அவை அளவு, நேரம், இயந்திரம் இவற்றை சார்ந்தது. அதாவது ஒரு ஆற்றில் ஒரு பகுதியில் ஒரு குறிப்பிட்ட அளவே மணல் எடுக்க வேண்டும்.அதுவும் தொடர்ச்சியாக இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நேரமே எடுக்க முடியும்.அதிலும் கனரக இயந்திரங்கள் அதிகம் பயன்படுத்த கூடாது.

மேலும் முறையான அனுமதி பெற்ற வாகனங்கள் மட்டுமே மணல் எடுக்க அனுமதி. இவை போன்ற பல விதிமுறைகள் உண்டு. இந்த விதிமுறைகளை மீறி மணல் எடுப்பதே ‘‘மணல் கொள்ளை‘‘.

அப்படி விதிமுறை மீறி அதிக மணல் எடுப்பதன் நோக்கம் என்ன? ஒரு வேளை தமிழ் நாட்டில் மணல் தேவை அதிகமோ? அப்படி அதிகம் என்றால் வேறு வழியே இல்லையே. எடுத்து தானே ஆக வேண்டும். பின் நாம் வீடு கட்டுவது எப்படி? இவை சராசரி மக்கள் அனைவர் மனதில் தோன்றும் கேள்வி.

நமது அண்டை மாநிலங்கள் கேரளா, கர்நாடகாவில் ஆறுகளில் மணல் எடுப்பது மிகக் குறைவு. பின் அவர்கள் எப்படி கட்டு மான பணிகளை செய்ய முடிகிறது?

நாம் இங்கு அளவுக்கு அதிகமாக மணலை எடுப்பதையும், அவர்கள் ஆற்றில் மணல் குறைவாக எடுப்பதையும் சற்று பொருத்தி பார்த்தால் உண்மை விளங்கும். ஆம், அண்டை மாநிலங்கள் தேவையை நிறைவேற்ற நாம் இங்கு நம் சுற்று சூழலை சிதைக்கிறோம். இதில் என்ன நியாயம் உள்ளது? அவர்கள் தன் மாநில இயற்கை வளங்களை காப்பதற்கு நாம் நம் வளங்களை தியாகம் செய்கிறோமா? அண்டை மாநிலங்கள் மட்டும் அல்ல அந்தமான் போன்ற பக்கத்து தீவுகளுக்கும் நம் மணல் ஏற்றுமதி செய்யபடுகிறது.

இப்பொது புரிந்து இருக்கும்.மணல் ஏன் திருடப்படுகிறது என்று? நம் தேவையை மீறி ஒரு சில சுயநலவாதிகள் தன் நலனுக்காக நம் வாழ்வாதாரத்தை அழிக்கிறார்கள். இதற்கு அரசே துணை போகிறது. அதிகாரத்தில் இருப்பவர் தானே மணல் கொள்ளையில் ஈடுபடுகிறார்கள். எனவே தான் மணல் திருடுபவர்களை விட்டு விட்டு அதை எதிர்த்து போராடும் போராளிகளை கைது செய்கிறது அதிகார மையம்.

யானை தன் தலையிலேயே மண்ணை அள்ளி போட்டு கொள்வது போல் ஒரு சிலரின் சுயநலத்தால் நம்மை நாமே அழித்துக் கொள்கிறோம். மனிதன் தம்மால் இனி உருவாக்கவே முடியாத இயற்கை அளித்த கொடைகளான காடு, மலை, மணல், கற்கள் போன்றவற்றை அழிக்க நமக்கு உரிமை இல்லை.

மீண்டும் நம்மால் இவற்றை எல்லாம் உருவாக்க முடியுமா?

இவற்றை சரி செய்ய முதலில் மணல் எடுக்கும் முறை இங்கே முறைப்படுத்த வேண்டும். அரசின் விதிமுறையோடு மட்டுமே இங்கே மணல் எடுக்கப்பட வேண்டும். அதற்கு சுய நலம் இல்லாத நேர்மையான அதிகார மையம் வேண்டும்.

மேலும் இயற்கை மணலுக்கு மாற்றாக செயற்கை முறையில் மணல் தயாரிக்கப்பட வேண்டும்.

நாம் உண்ணும் உணவு பொருட்களே செயற்கை முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யும் போது மணலை உருவாக்க முடியாதா?

தேவையே கண்டுபிடிப்பின் தாய். மணல் நமக்கு அவசிய தேவை. எனவே அதை நாம் இழக்க கூடாது. மணலுக்கு மாற்று இன்றைய காலத்தின் தேவை..

## செந்தில் பக்கிரிசாமி
மன்னார்குடி

# பொறுமையும் நிதானமும் வாழ்க்கை



கவி. மு. பிரேம்நசிர்
ஆட்டோ (CITU)
மன்னார்குடி

மெல்லமாய் மெல்லமாய் செல்லுங்கள்
ஒவ்வொரு இல்ல செல்வங்களே

ஏன் இந்த வேகம்
அதனால் விளைவது சோகம்

தினம் தினம் காண்கின்றோம் சாலையோரம்
பல தாய் பெற்ற பிள்ளைகள் - வேகத்தினால்
கண்ணீரஞ்சலி புகைப்படத்தில் நம்மை காணவா?

பத்து மாதம் சுமந்து
பெற்றார்களா தாய், தந்தைகள்?

எதை சாதிக்க இந்த வேகம்...

இந்த வேகத்தால் வெற்றியுள்ளதா?
இந்த வேகத்தால் நன்மையுள்ளதா?
இந்த வேகத்தால் பலனுண்டா?

சிந்தித்தால் கேள்விதான் மிஞ்சும்.

# மனிதன் எனும் மிருகம்



மன்னை ராம்

குரங்கில் இருந்து மனிதன் தோன்றியதாக படித்து உள்ளோம், ஆனால் இன்றய நிலையில் மனிதனில் இருந்து தான் மிருகம் தோன்றுகிறது.
மிருகத்தனம் அதிகமாகி மனிதம் மறைந்து வருகிறது.

மிருகத்தில் இருந்து நம்மை வேறுபடுத்துவது ஆறாம் அறிவு, அவ்வறிவையே நஞ்சாக கொண்டு மிக கொடிய மிருகமாக மாறி போனான்.

எல்லாருக்கும் எல்லாவற்றையும் சமமாக பங்கிட்டு கொடுத்தது இயற்கை. ஆனால் மனிதன் தனக்கு தேவையானதை இயற்கையிடம் இருந்து பறித்து கொண்டான். ஆமை புகுந்த வீடு உருப்படாது என மிருகத்தின் மீது பழி போட்டு தான் புகும் இடம்மேல்லாம் நாசம் செய்து கொண்டு வருகிறான்.

ஒரு மிருகம் தனக்கு பசி இல்லை என்றால் இரை அருகில் இருந்தால் கூட வேட்டையாடுவது இல்லை.

ஆனால் மனிதன் காட்டில் திரிந்த விலங்குகளை கொண்டு பிச்சை எடுக்க வைப்பது, வேட்டையாடி வீட்டுச் சுவர்களில் அலங்காரத்துக்காக மாட்டி வைப்பது என செயல்களை செய்வதில் தெரியும் யாருக்கு மிருக குணம் என்று

மிருகங்கள் குழந்தைகளிடம், அதிகப்படியான கருணையுடன் உள்ளன. ஜிம் கார்பட், எனது இந்தியா நூலில் ஒரு பச்சிளம் குழந்தை வேட்டை மிருகங்கள் மத்தியில் காட்டில் பத்திரமாய் சில நாட்கள் இருந்த சம்பவமொன்றைக் குறிப்பிடுகிறார்.

மற்றொரு நடைமுறை உதாரணம். உங்கள் முரட்டு நாயின் வாலை உங்கள் இளம் குழந்தை தைரியமாய் பிடித்து இழுக்கும்; காதை விடாப்பிடியாய் பிடித்திருக்கும். நாய் எல்லாவற்றையும் வினோதமாய்ப் பொறுக்கும். பாவம் குழந்தைதானே என நாய்க்கு எப்படித் தெரிகிறது? காரணம் மிருகங்களின் உள்ளுணர்வின் அடிப்படையில் செயல்படும் எளிய, சிக்கலற்ற முறை.

குழந்தை உடல் வெளிப்படுத்தும் பினமோன்களெனும் ரசாயனத்தை கிரகிக்கும் நாய் அதன் சீண்டல், சேட்டைகளை மன்னித்துப் பொறுமை காக்கிறது. டால்மேசன் போன்ற வகையைத் தவிர்த்து பெரும்பாலான நாய்கள் குழந்தைகள் விசயத்தில் மகா பொறுமைசாலிகள். இதே பொறுமையோ, கரிசனமோ மனிதனுக்கு ஏன் நடைபாதைவாழ் குழந்தையிடமோ, பிஞ்சுப் பூனைக்குட்டிகளிடமோ தோன்றுவதில்லை?

பணம், பதவி, புகழ், போன்றவற்றை பெறவும் பெற்றதை தக்கவைத்து கொள்ளவும்

பேராசை, காம இச்சை மது பழக்கங்களினாலும்
மனிதன் மிருமாகிறான்.

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஒரு மிருகமுண்டு, மிருகத்தனமாய் உள்ள மனிதரின் தாக்கத்தில் இருந்து தப்பித்தோர் சிலர் இருந்தாலும், சிக்கி சின்னாபின்னமாகியோர் பலரென்றே கூற வேண்டும்.

சென்னையில் ஒரு பாலியல் தொழிலாளியின் வீட்டில் நடந்த சம்பவம் ஒன்று அவர்களின் உல்லாசத்திற்கு குழந்தையின் அழுகுரல் இடைஞ்சலாக இருந்தது என பெட்ரோல் ஊற்றி ரோட்டில் ஓடவிட்டான் அந்த வாடிக்கையாளன், அவன் சைக்கோ என்று நீங்கள் எளிதாக ஒதுக்க முடியாது. ஏனென்றால் ஆவேசத்தில் எப்போதும் குழந்தைகளைக் கொளுத்திப் பார்க்கும் வழக்கம் அவனுக்கு இல்லை. அவனுக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் நலமாக உள்ளனர்.

அவன் சந்தோசத்தின் இடைஞ்சல் ஏற்பட்டதால் அவனுள் இருந்த மிருகம் எட்டி பார்த்தது அதற்கு 5 வயது குழந்தை பலியானது.

மும்பையில் சகோதரி நிர்பயாவிற்க்கு மிருகத்தனம் மிக்க மனிதனால் நடந்த கோரத்தை வார்த்தையில் விளக்கும் மனதிடம் எனக்கு இல்லை.

குறிப்பாக
பெண்ணை

குடித்துவிட்டு அடித்தவன்
பெண்ணெனக் கலைத்தவன்
பெண்தானே என்று அழைத்தவன்

பெண் படிப்பெதற்கு?
போ சமையென்று சிரித்தவன்

சமைந்ததை சடங்காக்கியவன்
கலப்பில் கற்பினைப் புதைத்தவன்

புதைத்த கையாலே பின்வந்து கற்பை பறித்தவன்
பின்னொரு நாளில் கற்பின்மைக்கு நகைத்தவன்

கர்ப்பத்தின் மீது உதைத்தவன்
கர்ப்பத்தைக் கலைக்க காதலித்தவன் என

அத்தனை வக்கிரங்களின் மீதும் ஏறி நிற்கும் அனைவரும்
மனிதன் எனும் மிருகமே.......

ஆண்கள் இது மாதிரி என்றால் பெண்கள் வேறு மாதிரி

குறிப்பாக மாமியார் மருமகள் சண்டை  எல்லா இடங்களிலும் பரவியிருக்கும் ஒரு சர்வதேசப் பிரச்சினை இது!

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர் டெரி அப்டர் நடத்திய ஆய்வின் படி

மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் தங்கள் கணவன்மார் அம்மாப் பிள்ளையாக இருக்கிறார்கள் என குறைபட்டுக் கொண்டனர். அதே சமயம், மூன்றில் இரண்டு பங்கு மாமியார்களோ, தங்கள் பையன் தங்களை தனிமைப்படுத்துகிறான், பொண்டாட்டி தாசன் ஆகிவிட்டான் என வருந்துகின்றனர். எனவே இது ஒரு விதத்தில் அக்கரைப் பச்சை அனுபவம் தான்.

தாயாக பார்க்க வேண்டிய மாமியாரை முதியோர் இல்லத்திற்கு அனுப்புவது
மகளாக பாவிக்க வேண்டிய மருமகளிடம் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்துவது என மனிதம் மறக்கடிக்கப்பட்டு மிருகம் துளிர்விடுகிறது.

இயற்கையாய் கொடுத்த சொத்து மண்
மண்ணே அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது.
மணல் கொள்ளையால்
பல தீவுகளை இழந்து உள்ளோம், நிலத்தடி நீர் மட்டத்தை குறைய வைக்கிறது, உழவு தொழில் பாதிப்பு அடைகிறது,
குறிப்பாக கடல் நீர் உட்புகுகிறது
இவை அனைத்தும் மணலை சூறையாடும் மனிதன் எனும் மிருகங்களே.

மண்ணை போன்றே இயற்கையின் சொத்துகளான
தாதுமணலும் கிரானைட்டும்
அளவுக்கு அதிகமாக கொள்ளையடிக்கப்படுகிறது.

மீனவர்களின் நலனுக்காக அமைக்கப்பட்டு உள்ள தூண்டில் வளைவுகளைத் தகர்த்து எறிந்து விட்டு, விதிமுறைகளை மீறி கடலுக்குள் மணல் அள்ளப்பட்ட அவலமும் நடைபெற்று இருக்கிறது. கனிமங்களைப் பிரித்து எடுத்துவிட்டு, பின்னர் கழிவு மணல் கடலுக்குள் கொட்டப்படுவதால் மீன்வளம் குறைகிறது.

இவற்றின் தீமைகள் இதனால் ஏற்படும் விளைவுகள் என அனைத்தையும் தெரிந்தே செய்கிறார்கள் இங்கு உள்ள பண ஆசை மிகுந்த மிருகங்கள்.

அவர்கள் ஒரு புறம் இருக்க
எங்கோ இருந்து கொண்டு
நம்மை அழிக்கும் நோக்குடன் இங்கு செயல்படும் திட்டங்கள்
மீத்தேன், அணுஉலை,
ஹைட்ரோகார்பன், நீயூட்ரினோ
போன்றவை.

அதை செயல்படுத்த துடிப்பவர்களுக்கு

உதவுபவர்கள் இங்கு நம்முடன் இருப்பவர்களே

யார் குடி எப்படி சென்றால் என்ன எனக்கு என் பணம் கிடைத்தால் போதும் என்று செயல்படுபவர்களே மிருகத்தனம் கொண்ட முட்டாள் மனிதர்கள்.

மனிதனின் குணம் மிருக குணம் தான்
தவறு செய்வது அவன் இயற்கை பண்பு தான்
என வியாக்யானம் பேசுபவர்களுக்கு பதில்
ஐயன் வள்ளுவர் சொன்னதே

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

சுயஒழுக்கம் இன்றைய மனிதர்களுக்கு மிகமிக அவசியம். சுயஒழுக்கம் குறைந்த மனிதர்கள் தான் மிருகத் தண்மையுடன் செயல்படுவது .

சுய ஒழுக்கத்துடன் மனிதனாக வாழ்வோம் .

இத்தலைப்பில் என்னை எழுத செய்த எனதருமை தோழிக்கு நன்றி.

**- மன்னை ராம்**

நீ விழும் போதெல்லாம் தாங்கி பிடிக்கும்
இந்த கை

மனம் உடையும்
போதெல்லாம் தட்டிக் கொடுக்கும்
இந்த கை


தனியே நீ அழும் போதெல்லாம்
உன் கண்ணீரை துடைக்கும்
இந்த கை

அது வேறு யார் கையும் அல்ல
உன்னுள் உள்ள உனது தன்னம்பிக்கை தான் ...

அதை மட்டும் ஒரு போதும் இழந்துவிடாதே.



**பால. யோகேஷ்**
மன்னார்குடி



அன்பு.பாரி வள்ளல்
மன்னார்குடி

சிறகடித்து பறக்க வேண்டிய...
சிறகொடிந்த சின்னஞ் சிறார்களும்!

படுத்துறங்கி ஓய்வு எடுக்க வேண்டிய...
முதுகு வளைந்த பெரியோர்களும்!

ஓய்வு எடுக்க நேரம் இன்றி உழைக்க வேண்டிய...
முடி உதிர்ந்த நடுத்தர வயதினரும்!

பறக்க மறந்து!
இளமை மறந்து!
முதுமை மறந்து!

குடும்ப வறுமையை
போக்க ஒன்றிணைந்து...

ஒரு வேளை உணவுக்காக
பல உயிர்களை இழந்து...

இவ்வாறு அனைத்தையும் இழந்து...
மக்களுக்காக!

தரம் உயர்ந்த!
பாதுகாப்பு நிறைந்த!
கண் கவர்ந்த!

பட்டாசுகளை உற்பத்தி செய்து...
மக்கள் நலம் காக்க உழைக்கும்
நம் உழைப்பாளிகளும்

அவர்கள் வாழ்வில்
சிறப்பாக தீபாவளியை
கொண்டாடவும்

பாதுகாப்பான முறையில்
இனி பணிகளை செய்யவும்
நம்மால் ஆன ஒத்துழைப்பு வழங்குவோம்.

# ஒன்று பட்டால் உண்டு வாழ்வு பாகம் - வன்புணர்வு



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

மெலினா என்றதொரு இத்தாலிய திரைப்படம் இருக்கிறது. சமூகத்தில் பெண்களை எவ்வாறு உடல் வழியே காண்கிறோம் என்பதை அதில் எந்தவித ஒளிவு மறைவுமின்றி இயக்குனர் காட்சிப்படுத்தி இருப்பார். அந்த படத்தை பார்த்தீர்களாயின் உங்களுக்கு மிகையாக தெரியலாம். ஆனால் அதில் நடைபெறும் சம்பவங்கள் அனைத்தும் தனி தனியாக அனைத்து பெண்களுக்கும் இன்று நடந்து கொண்டிருப்பவையே. அவற்றை ஒன்றிணைத்து ஒரு பெண்ணுக்கு எதிராக நடப்பதாக இயக்குனர் காட்சிப்படுத்தி இருப்பார்.

அது ஒரு சாதாரண சிற்றூர். காணும் பொங்கல் கொண்டாட்ட களிப்பில் இருக்க வேண்டிய மக்கள் அனைவரும் பதற்றத்தோடு அவ்வூர் கிணற்றுக்கு அருகில் கூடி இருந்தனர். முந்திரிகாடுகளின் வாசத்தை மீறி வந்த நாற்றம் தான் ஊர் மக்கள் அக்கிணற்றை  சூழ்ந்து நிற்க காரணம். காவலர்கள் வந்த பிறகு கயிற்று கட்டில் கொண்டு அக்கிணற்றில் மிதந்த பெண்ணின் சடலத்தை மேல் கொண்டு  வருகின்றனர். குப்புற கிடந்த அந்நிர்வாண உடலின்  தோள்கள் நீரில் ஊறி நனைந்த காகிதம் போல் பிய்ந்து போகும் நிலையில் இருந்தது.

யாரென்று தெரியாமல் இருந்த அவ்வுடலை ஓர் முதியவர் மெதுவாக புரட்டி போடுகிறார். வாயில் உள்ளாடைகள் திணிக்கப்பட்டிருந்த அவளது முகம் சிதைக்கப்பட்டிருந்தது. மார்பகங்களும் பிறப்புறுப்பும்  ஆயுதத்தால் கீறப்பட்டு அதிலிருந்து புழுக்கள் நெளிந்தோடின. அவளை சுமார் 4 நபர்கள் சேர்ந்து பாலியல் வல்லுறவு செய்து மூர்க்கத்தனமாக  கொன்றுள்ளனர் என்றும் அப்பொழுது அவள் வயிற்றில் கையடக்க அளவுள்ள சிசு இருந்ததாகவும் பிரேத பரிசோதனை  அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு சிதைக்கப்படும்பொழுது அப்பெண் எவ்வளவு வலியில் துடித்திருப்பார். நமக்கு கேட்கவே எவ்வளவு பதட்டமாக இருக்கிறது ஆனால் அதனை செய்தவர்களுக்கு எந்தவித பதட்டமும் இல்லை என அவ்வழக்கை விசாரித்த அதிகாரி கூறுகிறார். எந்த ஊர், யார் அந்த பெண், யார் செய்தார்கள்,  செய்தவர்கள் அகப்பட்டனரா , அவர்களுக்கான தண்டனை கிடைத்ததா என்று  நீங்கள் உடனே சிந்திக்க ஆரம்பித்து இருப்பீர்கள். இவற்றை எல்லாம் அறிந்த பின்னால் இந்நிகழ்வுக்கான காரணம் என்னவாக  இருக்கும் என்று அறிய முயல்வீர்கள். இறுதியாக காரணம் அறிந்ததும் ஒருவர் மீது குற்றம் சுமத்தி மற்றொருவர் மீது பரிதாபத்தை விதைத்து, சில நிமிடங்களில் அடுத்த வேலையை பார்க்க போய்விடுவீர்கள்.

இப்படி சிந்திப்பது தான் இன்றைய  பொது விதி. இறுதியாக ஒருவரை நாம் குற்றவாளி என நமக்குள்ளேயே தீர்ப்பளித்து கொண்டு அவ்விடயத்திலிருந்து நம்மை விடுவித்து கொள்வோம். வேறு என்ன நம்மால் செய்ய இயலும் என்கிறீரா? ஆம் நாம் தான் செய்ய வேண்டும். ஏனெனில் அந்த  பெண்ணோ, அவளை மூர்க்கமாக பாலியல் வல்லுறவு செய்தவர்களோ நம்மை போன்ற குடும்பங்களில் இருந்து வந்தவர்கள்  தான். அவர்கள் வேறு யாருமல்லர் நம்மில் ஒருவர் தான். அனைவரும் இணைந்தது தான் இந்த சமூகம்.

அப்பெண்ணை ஈவு இரக்கமற்ற முறையில் வன்புணர்வு செய்து கொன்றவர்களை நம்மை போன்ற குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என எப்படி நம்முடன் சேர்க்க இயலும்? அவர்கள் குற்றவாளிகள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என நீங்கள் நினைக்கலாம். குற்றத்திற்கு தண்டனை மட்டுமே தீர்வாகாது. குற்றத்திற்கான காரணங்களை அறிந்து, அந்த குற்றம் செய்ய தூண்டும் மனநிலையை தடுப்பது தான் ஆரோக்கியமான முழுமையான தீர்வு. அந்த தீர்வை நோக்கி நகர வேண்டுமெனில் நாம் அவர்களை நம் குடும்பத்துடன் பொருத்தி பார்க்க தான் வேண்டும். தீர்வுகள் குடும்பத்தில் தான் பொதிந்து கிடக்கின்றன. எங்கு தொலைத்தோமோ அங்கு தேடுவது தானே முறை.

குழுக்களாக, குடும்பங்களாக நாகரீகமாக வாழ்ந்த மனிதர்கள், நாடு கைப்பற்றும் ஆசையின் தூண்டுதலால் அங்குள்ள பெண்களை கவர ஆரம்பித்து மீண்டும் தன்னுள் இருந்த மிருக எண்ணங்களை துளிர் விட வைத்தனர். அப்பொழுது கூட அவை நாடுகளுக்கு இடையேயான போட்டியாக தானே இருந்ததே ஒழிய சக மனிதர்களை, சக குடும்ப உறுப்பினர்களை சீண்டும் அளவிற்கு அவை இல்லை.

தொடர்ந்து பண்பாட்டு தளத்தில் கட்டமைக்கப்பட்ட ஆண் பெண் வேறுபாடுகள் அதன் மூலம் ஆணிற்கு கிடைக்கப்பெற்ற அளவில்லா சுதந்திரம் பெண்ணிற்கு விதிக்கப்பட்ட அதீத கட்டுப்பாடுகள் அனைவரின் மனங்களில் ஆழமாக பதிந்துவிட்டன. அடுத்ததாக வந்த தொழிற்புரட்சி மற்றும் உலகமயமாக்கலினால் பொருளாதாரத்தை நோக்கி ஓட ஆரம்பித்த சூழலில் குடும்பங்கள் சிதைந்து தனி குடும்பங்கள் ஆயின. அதே காலகட்டத்தில் நாடுகள் சந்தைகளாகவும், மக்கள் நுகர்வோராகவும், பெண்கள் உற்பத்தியை சந்தைப்படுத்தும் பொருட்களாகவும் மாறினர். இந்த சூழலில் வளர்ந்த சமுதாயம், பெண்கள் அனைவரையும் பிண்டங்களாக பார்க்கும் மனோபாவத்தில் வளர்ந்தது. இதனை மேலும் எண்ணெய் ஊற்றி வளர்த்தது தொலைக்காட்சி, திரைத்துறை, ஊடகம் என அனைத்தும். இன்னும் விளக்கமாக சொல்ல வேண்டுமானால் தினமும் ஊடகங்களில் வரும் பெண்களின் புகைப்படங்களை கவனித்தாலே உங்களுக்கு புரியும்.

அவை முகங்களை மட்டும் பிரதிபலிப்பதாக இருக்காது. இறுதியாக உள்ளங்கையில் உலகம் இருக்கும் இணைய உலகில் குழந்தைகளையும் வன்புணர்வுக்கு ஆட்படுத்தும் கொடூரம் அரங்கேற ஆரம்பித்து விட்டது. குழந்தைகளையும் பெண்களாக பாலியல் பிண்டங்களாக கற்பனை செய்யும் மனோபாவமே இதற்க்கு காரணம் என மன நல மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். நம் நாட்டின் பாலியல் குற்றங்களை ஆராய்ந்தால் 2 வயது குழந்தைகளிலிருந்து 80 வயது வரையுள்ள முதியவர் வரை இதில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிம்பன்சி குரங்கை அறிந்திருப்பீர்கள். ஆண் சிம்பன்சி குரங்குகள் எப்பொழுதும் பெண் சிம்பன்சியை வல்லுறவு செய்யும். அதைப் பெண் சிம்பன்சிக்கள் பல சமயம் அச்சத்துடன் தடுக்கும்.

உடனே உங்களுக்கு தோன்றலாம் மனிதனும் விலங்கும் ஒன்றா? நாம் ஆறறிவு உள்ள மனிதர்கள் என்று. ஆம் உயிரியல் ரீதியாக நாமும் சிம்பன்சியும் ஒரே இனம் தான் என்கின்றனர் ஆய்வாளர்கள். சுமார் 50 லட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதர்களும் சிம்பன்சியும் ஒரே மூதாதையர்களிடமிருந்து பிரிந்தவர்கள். சிம்பன்சியின் டிஎன்ஏ நம்முடைய டிஎன்ஏவுடன் 98 சதவிகிதம் ஒத்து போகிறது. இது போன்ற குணங்கள் உயிரியல் நீட்சியாக இருக்கலாம். உடனே குற்றவாளியின் குற்றத்தை நியாயப்படுத்துகிறீரா? அவன்

குற்றவாளி தான் என நீங்கள் தீர்ப்பளிப்பது புரிகிறது. இங்கு நாம் தீர்ப்பை விட தீர்வை நோக்கி பேசுவதே நியாயமாக இருக்கும்.

சிம்பென்சியுடன் 98 சதவிகிதம் டிஎன்ஏ ஒத்துப்போகும் மனிதன் எப்படி இவ்வளவு முன்னேறினான் என ஆராயும் பொழுது கண்டறியப்பட்டது தான் ‘‘அர்காப்11பி’’ என்ற ஜீன். இந்த ஜீன் மனிதனின் மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. இந்த ஜீன் மனிதனை தவிர வேறு எந்த உயிரினத்திற்கும் இல்லை. இந்த ஜீனினால் ஏற்படும் மூளை வளர்ச்சி தான் நம்மை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இதன் மரபியல் வளர்ச்சி தான் மனிதனை நாகரிக சமூகவியல் நோக்கி நகர்த்தியது.

விலங்குகள் போன்று வாழ்ந்த மனிதன் தன்னை குழுவாக கட்டமைத்து, தனக்குள் உறவு முறைகளை ஏற்படுத்தி கட்டுப்பாடாக வாழ ஆரம்பித்தான். இது தான் நாகரீக வளர்ச்சியாக பார்க்கப்படுகிறது. வாழ்வியலில் ஏற்பட்ட இம்மாற்றம் தான் மனிதனை மேலும் சிந்திக்க வைத்து சிம்பன்சியிலிருந்து வேறுபடுத்தி காட்டுகிறது.

நம் முன்னோரிலிருந்து பிரிந்து மூளையின் வளர்ச்சி காரணமாக , நம்முடைய சமூக வாழ்வியலை எப்படி கட்டமைத்தோமோ அதுபோல தான் தற்பொழுதும் நாம் பெண்களை பாலியல் பிண்டங்களாக பார்க்கும் பார்வையை நம்முடைய சமூக வாழ்வியல் மூலம் மாற்றி பெண்களை உணர்வு பூர்வமாக அணுகும் வாழ்வியலை கட்டமைக்க வேண்டும். ஒரு கூட்டு குடும்பத்தை எடுத்து கொள்ளுங்கள். அது உங்கள் குடும்பமாக, உங்களுக்கு தெரிந்த, நீங்கள் பார்த்த, கேள்விப்பட்ட குடும்பமாக இருக்கலாம். அங்கு பல வகையான உறவு முறைகளில் உள்ளவர்கள் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து வருவார்கள். அந்த சூழலில் வளரும் குழந்தைகள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொன்றை கற்கும். பெண்களை ஒவ்வொரு உறவுமுறை சொல்லி அழைக்கும். அக்குடும்பத்தில் அவர்களுடன் உறவாட பேச பழக கண்டிக்க எடுத்துக்கூற என ஏகப்பட்ட நபர்கள் இருப்பார்கள்.

அனைவரும் நல்வழியை போதிப்பார்கள். குடும்பத்தை விட்டு வெளியில் உள்ள பெண்களை அணுகுவதும் அவர்களுக்கு விசித்திரமானதாகவோ, கடினமானதாகவோ இருக்காது. இயல்பாக அவர்களுடன் பழக ஆரம்பிப்பர். சிலர் எதிர் பாலின ஈர்ப்பால் தடுமாறும் பொழுதும் அவர்களை சீர்படுத்த அவர்களின் மாமனோ மச்சானோ அக்குடும்பத்தில் இருப்பர். இதேபோல் பலர் ஓர் குடும்பமாக வாழும் பொழுது தவறு செய்யும் சூழலும் ஏற்படாது. தவறு செய்யும் சூழல் ஏற்பட்டாலும் தன் வீட்டு பெரியவர்களை நினைத்து அவர்களின் மீதுள்ள பயத்தாலோ மரியாதையினாலோ அதனை செய்யாமல் விலகிடுவர். இதே போன்று பலதரப்பட்ட கூட்டு குடும்பங்கள் இணையும் பொழுது ஒட்டு மொத்த சமூகமும் உறவுகள் வழிநின்று பெண்களை பெண்களாக பாவிக்கும்.

குடும்பம் என்பது தனித்து வாழ்வது அல்ல. அது உறவுமுறைகளுடன் கூடி வாழ்வது. அன்பும் அரவணைப்பும் கனிவும் கண்டிப்பும் நம்மை ஆட்கொள்கிற மனிதர்கள் நிறைந்த அமைப்பு . தீமைகளும் துயரங்களும் நம்மை அண்டாமல் காக்கும் வேலி.
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.

அடுத்த பாகம் - தொலைக்காட்சி தலைமுறை. தொடரும்

– **ரா.ராஜராஜன்**, மன்னார்குடி

# தன்னம்பிக்கை



த. தனசேகர்
மன்னை

மைக் டைசன் பிரபல குத்துச்சண்டை வீரர் என்பது அனைவரும் அறிந்ததே. அவருடைய சிறப்பு என்னவென்றால் ஆட்டம் முழுமையாக விளையாட மாட்டார் ஆட்டத்தின் முதல், இரண்டாம் சுற்றுகளிலேயே Knock out செய்துவிடுவார். அந்த காலகட்டத்தில் தொடர்ச்சியாக 42 முறை சாம்பியன் பட்டம் பெற்றவர். அவருடன் அன்றைய போட்டியில் பட்லர் டக்ளஸ் என்ற வீரர் களம் கொண்டார்.

முதல் சுற்றில் கடுமையான குத்துகளால் பட்லர் டக்ளஸ் நிதானத்தை இழந்தார். முதல் சுற்று முடிய சில வினாடிகள் இருந்த நிலையில் மைக்டைசனின் குத்தில் கீழே விழுந்தார். அதிர்ஷ்டவசமாக கீழே விழுந்ததும் முதல் சுற்று முடிந்தது.

அங்கு கூடியிருந்த அனைவரும் மைக் டைசன் தான் எப்போதும் போல வெற்றியாளர் என்று முடிவு எடுத்துவிட்டனர்.

இரண்டாவது சுற்று ஆரம்பித்தது அன்று ஒரு புதிய வரலாறு உருவானது. அதன் கதாநாயகன் பட்லர் டக்ளஸ். ஆம் முதல் சுற்றிலேயே தோற்றுவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட டக்ளஸ் இரண்டாம் சுற்றில் மைக்டைசனை Knock out செய்துவிட்டார்.

அவர் வெற்றி பெற்றதற்கான காரணம் கேட்கப்பட்டது அதற்கான அவரின் பதில் சற்றே அதிர வைத்தது. போட்டி அறிவித்த அன்று என் அம்மா அனைவரிடமும் கூறுவார். என் மகன், மைக்டைசனை வெற்றி பெறுவான் என்று கூறிய என் அம்மா. போட்டி நடக்கும் மூன்று வாரங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றார்.

இந்நிலையில் நான் போட்டியில் பங்கு பெறுவதே கேள்வி குறியானது. இரண்டாம் சுற்றில் நான வெற்றி பெற காரணம் என் அம்மா கூறிய வார்த்தைகள் தான். அந்த வார்த்தைகள் தான் போராட துண்டியது.

நம்மை சுற்றி எப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும் நம்மால் நிச்சயம் வெற்றி பெற முடியும் நம் மீது நாம் நம்பிக்கை கொண்டிருந்தால். ஒரு செயலை வெற்றி பெறுவதற்கான உறுதியான காரணம் இருந்தால் நிச்சயமாக தன்னம்பிக்கையோடு போராடினால் வெற்றி பெறலாம்.

மைக் டைசன் தான் வாழ்க்கை என்று கொள்வோம், சில இடங்களில் நம்மை தோற்கடித்து இருக்கலாம்.

டக்ளஸ் தான் நாம் கொண்ட தன்னம்பிக்கை அடிக்கும் போது ஒவ்வொரு முறையும் தன்னம்பிக்கையோடு எழுந்து நின்று பட்லர் டக்ளஸ் போன்று வெல்வோம்.









## மறு சீரமைப்பு பணி

**பரவாக்கோட்டை**
**இளைஞர் எழுச்சி பேரவை**
திருவாரூர் மாவட்டம்
மன்னார்குடி வட்டம்
பரவாக்கோட்டை கிராமம்
paravaiperavai@gmail.com
+91 77080 85108

பேருந்து நிறுத்தம் பெயர்கள்:

1) அய்யனார் குளம் பேருந்து நிறுத்தம்
2) அண்ணா சிலை பேருந்து நிறுத்தம்
3) அரசு மேல்நிலை பள்ளி பேருந்து நிறுத்தம்
4) காவல் நிலைய பேருந்து நிறுத்தம்
5) கருவப்பிள்ளை நத்தம் பேருந்து நிறுத்தம்

# உணவும் மருந்தும்



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

உணவே மருந்து
மருந்தே உணவு

உணவே மருந்து
உடலே மருத்துவர்

சுவையே மருந்து
நாக்கே மருத்துவர்

உன்னா நோன்பே
உயரிய மருந்து

அளவான உணவை
உடல் சீரணிக்கும்

அளவுக்கு மிகுதியான உணவு
உடலையே சீரணிக்கும்

உணவை குடி நீரை உண்
நொறுங்க தின்றால் நூறுவயது.

கழிவு தேக்கம் நோய்
கழிவு நீக்கம் சிகிச்சை

அஜீரணமும் மலச்சிக்கலும் ஆதிநோய்கள்
மற்ற அனைத்தும் மீதி நோய்கள்

4448 நோய்களும் அதுவழிவந்த மீதி நோய்கள்

நோயும் ஒன்றே
சிகிச்சையும் ஒன்றே

மலச்சிக்கலே மனச்சிக்கல் மற்ற சிக்கல்களுக்கெல்லாம் மூலம்.

மருந்து என்பது மறு+உந்து சக்தியாக இருக்க வேண்டும்.

வலியும் நோயும் நம் நண்பர்கள்

உடலுக்கும் உயிர்க்கும் இணக்கம் வாழ்க்கை

உடலுக்கும் உயிர்க்கும் பிணக்கு நோய்
உடலுக்கும் உயிர்க்கும் பிரிவு  மரணம்

வலியோ நோயோ நம் உடல் அறிவித்தால்:

1. உடல் இயக்க சக்தியை நிறுத்த வேண்டும்.

2. செரிமான சக்தியை நிறுத்த.

வலியோ நோயோ நம் உடல் அறிவித்தால்:

1. உடல் இயக்க சக்தியை நிறுத்த வேண்டும். உடல் இயக்கத்தை நிறுத்தினால், இயக்கத்திற்கு செயல்படும்  செல்கள் அனைத்தும் நோயை எ விரைந்து

2. செரிமான சக்தியை நிறுத்த வேண்டும்:
வாயில் கசப்பு போகும் வரை  உள்ளே எந்த உணவையும் போட கூடாது. செரிமானத்திற்கு செல்லும் செல்கள் அனைத்தும் நோயை சரி செய்ய விரைந்து  செல்லும்.

இந்த இரண்டு வேலைகளையும் நிறுத்திவிட்டால் நோய்  எதிர்ப்பு சக்தி நோயை சரிசெய்ய விரைந்து சென்று நோய் பூரண குணமடையும்.

மருத்துவம் என்பது முதலில் உடலில் உள்ள கழிவை முழுமையாக நீக்க வேண்டும். பிறகு உணவு நன்றாக சீரணிக்க வைக்க வேண்டும். பிறகு உறுப்புகள் பலப்பட மூலத்தை ஈகையாக தரும் மூலிகை மூலம் மரு  உந்து (மருந்து) சக்தியை கொடுக்க வேண்டும்.

உடலுக்கு பொருந்தும் உணவும் முறையான பயிற்சியும்  கொடுத்தால் உடலும் உயரும் இணக்கமாகி நாம் விரும்பும் வரை உடலுக்குள் உயிர் இயங்கிக்கொண்டே இருக்கும்.

- ராணிச்சந்திரன்
மன்னார்குடி

அட்டைப்பட உதவி
VASA PHOTOGRAPHY
வசந்தன்
hp: 9786828973
monguski@gmail.com
vasa photography



நிரஞ்சன்
மன்னார்குடி

அன்னையோ, மனைவியோ,
மகளோ, அக்காவோ, தங்கையோ,

பாட்டியோ, பேத்தியோ, அண்ணியோ,
மச்சினியோ, மாமியாரோ, தம்பி மனைவியோ,

பெரியம்மாவோ, அத்தையோ, சித்தியோ,
தோழியோ, காதலியோ, கள்ள காதலியோ,

ஆசிரியையோ, கைம்பெண்ணோ,
மாற்றான் தாயோ, தத்தெடுத்தவளோ,

வேலைக்காரியோ, பக்கத்துக்கு வீட்டுக்காரியோ,
எதிர்வீட்டுக்காரியோ, அரசியோ, பிச்சைகாரியோ,

கூத்தாடுபவளோ, புரட்சி செய்பவளோ,
விபச்சாரம் செய்பவளோ, பிரம்மச்சரியம் மேற்கொள்பவளோ,

வீரம் கொண்டவளோ, சோரம் போனவளோ,
குமரியோ, கிழவியோ, கர்ப்பிணியோ,

திருடியோ, தாசியோ, வேசியோ...

ஒரு பெண்ணின் ஆசி பெற வேண்டும்,
ஒரு பெண் சமைத்து
பரிமாறி உணவு உண்ண வேண்டும்...

முதல் பசியை தீர்க்கும்
முலைப்பால் உடைய பெண்ணே
உணவின் சாரம்.

பக்தை ஆனாலும்
பரத்தை ஆனாலும்
பெண் போற்றப்பட வேண்டியவளே!

ஆணின் இறைவி அவளே!

# கிட்டு தலையாரி



மன்னை மணிகண்டன்

யய்யா யாருய்யா அது? முள் படல தள்ளுனவுடனே வீட்டு திண்ணையில கட்டிலில் கிடந்த கீழவீட்டு ஆத்தா தலையைத் தூக்க முடியாமல் தூக்கி கொஞ்சம் சிரமத்துடன் கேட்டது. சத்தம் கேட்டு முன்னாடி இருந்த சின்ன தோட்டத்துல எதயோ வெட்டிகிட்ட இருந்த ஆறுமுகம் பெரியப்பா என்ன பார்த்தவுடன் சின்ன புன்முறுவலுடன் எழுந்து வேட்டியிலிருந்த மண்ணை தட்டியபடியே வந்தார்.

யம்மா நம்ம தலையாரி அய்யா பேரன், சுந்தரி மவன்.
ஆத்தா கண்களை சுருக்கியபடி யாரு !! நம்ம கிட்டு பேரனா ?
ஆமாம்மா.

யய்யா இங்கன கொஞ்சம் வாய்யா ,நல்லாயிருக்கியாய்யா? வாஞ்சையுடன் என்னை அருகில் வரச்சொல்லி கட்டிலின் விளிம்பின் ஒரத்தில் நின்ற என்னை தடவி, குனியசொல்லி உச்சிமுகர்ந்தது.

யய்யா வூட்டுல எல்லாரும் நல்லாயிருக்கங்களா?
இருக்காங்க ஆத்தா
உங்க அம்மா எப்படி இருக்கா? ம்ம் நல்லா இருக்காங்க்க

நல்லாயிருக்காளா? ம்ம பாவி மக அவள பார்த்து எவ்வளவு நாளாச்சி, பாவம்யா அவ, கூட பொறந்த பொறப்பு போயி இப்ப அப்பனையும் பறிகொடுத்துட்டு நிக்கிறா என்ன பண்றது அவள பெத்தவ பண்ன பாவம் இவ தலையில விழுது, ம்ம் அதுகிடக்கட்டும் விடு என்னாமச்சும் சாப்புடுறியா?

இல்ல ஆத்தா இப்பதான் சாப்புட்டு வந்தேன்.

ஏலெய் ஆறுமுகம் உன் பொண்டாட்டிகிட்ட கொஞ்சம் மோர் கொண்டுவர சொல்லுடா இந்த வயதிலும் ஆத்தா, பெரியப்பாவை அதட்டியது.

புள்ள வேகாத வெயில்ல வந்துருக்கான்.இப்ப எதுக்குய்யா இந்த வெயில்ல கிடந்து வந்த பொழுது சாய வரலாம்ல.

அது சரி உங்கப்பன் எப்படி இருக்கான் நல்லாயிருக்கானா ?

ம்ம் இந்த நேரத்துக்கெல்லாம் கிட்டு மட்டும் உசுரோட இருந்துருந்தா இந்தா மேக்கால இருக்க மேட்டு நிலத்த பாக்க வர்ரப்ப எல்லாம் என்னய வந்து பாக்காம போவாது வந்துச்சின்னா பார்த்து பேசிட்டு கொஞ்சம் வெத்திலை போட்டுட்டுதான் போவும்.

என் தாத்தா எப்பவும் இப்படித்தான் எங்க எப்ப யார்கூட பேசிக்கிட்டு இருந்தாலும்

வெத்திலை போடாம பேசவே மாட்டாங்க.அதுவும் தாத்தாவுக்கு  லெஷ்மி சீவல்ன்னா உசுறு எனக்கு தாத்தான்னாலே மொதல்ல லெஷ்மி சீவல் அப்புறம் கையில எப்பவும் வச்சிருக்குர அந்த தலையாரிக்கம்பு, அந்த தும்பைபூபோல இருக்குற அடர்த்தியான மீசை இதுதான் ஞாபகத்துல வரும்.எனக்கு தெரிஞ்சி தாத்தா லெஷ்மி சீவல தவிர வேற எதுவும் போட்டு நான் பார்த்தது இல்ல. அதுவும் எங்கிட்டதான் வெத்திலை சீவல் வாங்கி வர சொல்லுவாங்க நான் கடைக்கு போனாக்க தாத்தா அஞ்சு ரூபா கொடுத்து ரெண்டு ரூபாக்கு லெஷ்மி சீவலும் ரெண்டு ரூபாய்க்கு வெத்திலையும் கொஞ்சம் சுண்ணாம்பும் மிச்ச ஒரு ரூபாய்க்கு என்ன எதாச்சும் வாங்கிதிங்க சொல்லுவாங்க.

எப்பாயாவது அந்த ஒரு ரூபாய்க்கு எங்க அப்பத்தா போயிலை கேட்கும் கேட்டா வாங்கிட்டு வருவேன். இல்லாட்டி எனக்குதான் அந்த ஒரு ரூபாய். இதுக்காவே நான் கடைக்கு போறப்ப அப்பத்தா கண்ணுல படாம போவேன்.

என்னை எல்லாருமே தலையாரி பேரன்னுதான் சொல்லுவாங்க, அதுல எனக்கு என்னமோ என் தாத்தா  எங்க ஜில்லா கலெக்டர் மாரி பெருமை தாங்காது, பின்ன என் தாத்தாதான் அந்த மூணு கிராமத்துக்குமே தலையாரி, கிட்டத்தட்ட கால் நூற்றாண்டா அவர்தான் தலையாரி. ஊர்ல பஞ்சாயத்து தலைவர யார் வந்தாலும் ஊர் கமிட்டி தாத்தாவதான் தலையாரியா போடுவாங்கன்னு அம்மா சொல்லிருக்காங்க.

தாத்தா பாக்குறதுக்கு சும்மா மிலிட்டரிமேன் மாதிரி நல்ல வாட்ட சாட்டமா இருப்பாங்க. கையில ஒரு மூங்கில் கம்பு நல்லா நீட்டமா இருக்கும். அதோட ஒரு முனையில கணு குமிழ்மாரி. இருக்கும் அத வச்சிதான் ஆடு மாடு எல்லாத்தையும் விரட்டு வாங்க. எப்பவும் அந்த கம்பு கையிலேயே இருக்கும்.தாத்தா சொல்லுவாங்க லத்தி புடிக்க வேண்டிய கையில இந்த தலையாரிக்கம்ப கொடுத்துட்டான் கடவுள்னு. பின்ன அந்த காலத்துலயே போலீஸ் வேலை கிடைச்சி  போகவேண்டியதாம்! யாரொ கடைசி நேரத்துல இவர கம்யூனிஸ்ட்னு சொன்னதால வேலை கிடைக்கலயாம். அப்பவெல்லாம் கம்யூனிஸ்ட் ஆளுங்களுக்கு வேலை தரமாட்டாங்கன்னு அம்மா சொல்லுவா, வேலை கிடைக்கலங்குற கோபம் தாத்தாவுக்கு அவரோட கடைசி காலம் வரை கம்யூனிஸ்ட் மேல இருந்துச்சு கம்யூனிஸ்ட் ஆளுங்கன்னாலெ தாத்தாவுக்கு ஆகாது.

ய்ய்யா தாத்தாவுக்கு காரியம் என்னைக்கியா வச்சிருக்கீங்க? பதினாறாம் நாள்தான?
ஆமா ஆத்தா வர்ர சனிக்கிழமை ராத்திரி கல்நிறுத்தி மறுநாள்காலையில காரியம் அத சொல்லிட்டு போவலாமுன்னுதான் வந்தேன் அப்பாவுக்கு லீவ் இல்லை அதான் ,பெரியப்பா கிட்ட சொல்லிட்டு அப்படியே கீழ தெரு பூரா சொல்லனும், சொல்லிட்டு பெரியப்பாவை பார்த்தேன் கையில மோர் சொம்புடன் நின்னார்

எங்க பெரியப்பா அம்மாவ காணோம் பெரியம்மாவை காணததால் வீட்டின் உள்ளே கண்களால் துழாவியபடியே கேட்டேன்

ம்ம் அதுவா உங்க பெரியம்மா முத்துபேட்டை வரைக்கும் போயிருக்காப்பா புதன் கிழமை சந்தையில்ல அதான். அதோட உங்க அக்கா வேற காலெஜ்ல இருந்து இந்த வாரம் வருது அதுக்கு நெத்திலி கருவாடுன்னா உசுறு அதான் வாங்கிட்டு வரலாம்னு போயிருக்கு நாந்தான் ஆத்தாவ தனியா விட்டுட்டு எங்கயும் போக முடியல அதனாலதான் பெரியம்மாவ

மட்டும் அனுப்பிவச்சேன். சொல்லிகிட்டே பெரியப்பா ஆத்தாவோட கட்டிலுக்கு கீழே இருந்து ஒரு வெள்ளை பிளாஷ்டிக் டப்பாவ எடுத்தார் என்னனு பார்த்தா ஆத்தா வெத்திலை எச்சிலை துப்ப வச்சிருக்குற டப்பா.. கிராமத்தில வயசானவங்க நடமாட்டம் இல்லாம இருந்தா இந்தமாரிதான் வச்சுப்பாங்க. எங்க தாத்தாவும் கிட்னி பிரச்சனைக்கு ஆஸ்பத்திரி போயிட்டு வந்தபிறகு இந்தமாரிதான் ஒரு சிவப்பு கலர் டப்பாவ அம்மாதான் தேடி கொடுத்தா நாந்தான் அதுல மண்ண நிரப்பி கொண்டு வந்து வச்சேன்.

ஆனால் தாத்தாவுக்கு அதுல துப்பறதுக்கு புடிக்கலைன்னு அவங்க மூஞ்சி போற போக்க வச்சே சொல்லிடலாம். எனக்கும்தான் பிடிக்கல ஏன்னா எப்பவுமே தாத்தா கட்டில்மேல கம்பீரமா உக்காந்துகிட்டு தான் வெத்திலை போடுவாங்க அதுவும் அந்த தும்மைப்பூ போல இருக்குற மீசையை முறுக்கிகிட்டு வெத்திலைய எடுத்து ஒரு முனைய பிடிச்சி காம்ப கிள்ளிட்டு லேசா சுண்ணாம்ப தடவி கொஞ்சம் அவங்களுக்கு பிடிச்ச லெஷ்மி சீவல சேர்த்து மடிச்சி வெத்திலை போடுறதேதனி அழகு அந்த வெத்திலைகாம்ப வாங்குறத்துக்காகவே நான் தாத்தா வெத்திலை போடுறப்ப எல்லாம் பக்கத்துலயே நிப்பேன், கிள்ளி எனக்குதான் தருவாங்க.

அந்த காம்போட புளிப்பும் உவர்ப்பும் கலந்தமாரியானா ஒரு சுவைக்காகவே எனக்கு புடிக்கும். அதேபோல அவங்க அந்த எச்சிய துப்புறதுக்கு முன்னாடி அந்த மீசைமேல எச்சில் படாம மீசைய நீவி விடுறத பாத்துகிட்டே இருக்கலாம். அப்படிபட்ட தாத்தா எப்படி இந்த சிவப்பு டப்பாவுல துப்பமுடியும் அதுவும் தாத்தாவுக்கு கிட்னி பிரச்சனை வந்த பிறகு டாக்டர் கண்டிப்பா இதெல்லாம் விட்ரனும் மிஸ்டர் கிட்டுன்னு சொன்னார். அப்புறந்தான் தெரிஞ்சது தாத்தா வெத்திலைய கொறைச்சதுக்கு காரணம் டாக்டர் இல்ல அந்த டப்பாதான்னு.

யோசிச்சிகிட்டே பெரியப்பா கிட்ட அந்த டப்பாவ வாங்கி மண்ணை நிரப்பி கொடுத்தேன். பெரியப்பா இப்படிதான் இந்த வயசிலேயும் எதாவது வேலை பாத்துகிட்டேதான் இருப்பார் இந்நேரத்துக்கு அரசாங்க வேலைன்னா ரிட்டையர் ஆகிருப்பார். பெரியப்பாவுக்கு அவர் பொண்ணுண்ணா ரொம்ப பிரியம் அதானாலேயே அந்த அக்கா காலேஜ்ல படிக்கணும்னு சொன்னப்ப யார்தடுத்தும் கேட்காம கொண்டுபோய் தஞ்சாவூர்ல சேர்த்துவிட்டாருன்னு அம்மா சொல்லிருக்காங்க எங்க கிராமத்திலேயே முதன்முதலா பொம்பள புள்ளய காலேஜ்ல படிக்கவச்சது ஆறுமுகம் பெரியப்பாதான் அதானாலேயே அவர்மேல எனக்கு மரியாதை ஜாஸ்தி.

என்னமோ போங்க யாருவிட்ட சாபமோ உங்க தாத்தாவுக்கு இப்படி ஆயிட்டு
ம்ம், உங்க மாமன் போனப்பவே பாதி செத்துட்டாரு என்ன பண்றது?ஆத்தா புலம்பியது.
தாத்தா சோகம் பத்தாதுன்னு ஆத்தா என் மாமா செத்ததவேற ஞாபகபடுத்தியது
உங்க தாத்தா நல்ல ஆத்மாய்யா அதுக்கு இப்படியா?

சரி விடு எல்லாம் விதி ம்ம் எனக்கும்தான் நேரம் வரமாட்டங்குது இங்கன கிடந்து அல்லாடுறேன்

ஆத்தா சொன்னவுடன் பெரியப்பா, யெம்மா சும்மா இரும்மா நீ வேற அவன் இன்னும் கீழத்தெருவெல்லாம் போவனுமாம் ச்சும்மா புலம்பாத.

வயசாயிடிச்சுல்ல அதான் ஏதாவது பினாத்திகிட்டே இருக்கும்.
அதுக்கு காதுல கேட்காதா மாதிரி பெரியப்பா மெதுவா சொன்னார்.
சரி பெரியப்பா நான் வரேன், ஆத்தா நான் வாரென் சொல்லிட்டு வெளியே வந்தேன்
பெரியப்பாவும் கூடவே வெளியே வந்தார்

ஏன்டா தம்பி, நடந்தா வந்தா? சரி என்னோட சைக்கிள எடுத்துட்டுபோ நான் இப்ப எங்க போகப்போறேன் இன்னும் கீழதெருவெல்லாம் சொல்லனுமில்ல நடந்துபோனா எப்ப சொல்லிட்டு திரும்புறது அதுவும் இந்த வேகாத வெயில்லன்னு,
சொல்லிகிட்டே பெரியப்பா சைக்கிளை நகர்த்த போனார்.

இல்ல பெரியப்பா, வேணாம் பரவாயில்ல நான் பக்கத்துல வாத்தியார் பையன் மணிகூட சேர்ந்து போய்க்கிறேன். நீங்க மறக்காம சனிக்கிழமை சாயங்காலமே வந்துடுங்க சொல்லிட்டு விறு விறுவேன அவர்கள் வீட்டின் முள்வேலிபடலை தாண்டி ரோட்டை அடைந்தேன்.
ஆத்தா சொன்னமாரி வெயில் கொஞ்சம் இல்ல ரொம்பவே அதிகம்தான், மணல் ரோட்ட தாண்டி காளியம்மன் கோயில்கிட்ட வரதுக்குள்ளயே வேர்த்து ஊத்திடிச்சு. இன்னும் கொஞ்ச தூரம் இதே மண்ரோட்ல போனா மெயின் ரோடு வரும் அங்கிருந்து ஈஸியா கீழதெரு போயிடலாம் ஆனா வாத்தியார்மாமா வீட்டுக்கு போய் மணிய கூட்டிட்டு போகனும்னா கிணத்தடி பக்கமா போவனும் ஆனா கிணத்தடி பக்கம் நாய்ங்க தொந்தரவு வேற சரி அவன அப்புறமா பார்த்துக்கலாம்னு மண்ரோட்லயே நடந்தேன்.

தாத்தா இதே மண்ரோட்ல என்னை தோள்ல துக்கிகிட்டு வேகாத வெயில்ல எத்தனை தடவ நடந்திருப்பாங்க. அதுவும் செருப்புகூட இல்லாம அப்படி போகும் பொழுது எதாவது கதைசொல்லிகிட்டேதான் போவாங்க அதுவும் தாத்தா விக்கிரமாதித்தன் கதை சொன்னா அந்த வேதாளம் கூட கூட விக்கிரமாதித்தன் தோள விட்டு இறங்கிடும் ஆனா நான் இறங்கினதே இல்ல.

இப்படிபட்ட தாத்தாவயே அவரு பொண்டாட்டி ஏன் பாட்டின்னு சொல்லாம இப்படி சொல்றென்னா எங்க தாத்தாவ தனியா விட்டுட்டு போனா அந்த பொம்பளய அப்படிதான் சொல்லனும் ரெண்டு கைக்குழந்தைகளோட வேண்டாம்னு விட்டுட்டு போயிடுச்சாம்.ஆனா தாத்தா அதுக்கப்புறம் இன்னொரு கல்யாணம் கூட பண்ணிக்காம எங்க அம்மாவயும் மாமாவயும் வளர்த்துருக்காங்க இதெல்லாம் எனக்கு என்னோட அக்கா சொல்லிதான் தெரியும்.இப்படி தாத்தாவ பத்தி ஒன்னு ஒன்னா தெரியவர வர எனக்கும் தாத்தாவுக்குமானா பிணைப்பு ஈதல் சகப்பிணைப்பு மாதிரி அதிகமாயிடுச்சு.

ஒருவழியா கீழதெருவெல்லாம் சொல்லிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்
வீட்ல யாரையும் காணோம். அம்மா மட்டும் பின்னாடி காயப்போட்ட துணியெல்லாம் மடிச்சிகிட்டு இருந்தாள்.

அம்மா எங்கம்மா அக்கா சின்னபொண்ணு யாரையும் காணொம் அம்மாச்சி எங்க?
எல்லாரும் பக்கத்துல பால்வாடி வரைக்கும் போயிருக்காங்க

ஆமா நீ எல்லாருக்கும் சொல்லிட்டியா?

சொல்லிட்டேம்மா ஆனா அந்த ஈபி ல இருக்காரே பாஸ்கர் சித்தப்பா அவரு வீட்ல யாருமில்ல அங்க மட்டும் சொல்லல.

சரி விடு நான் பாத்துகிறென் நீ வீட்லயே இரு எல்லாரும் இப்ப வந்துடுவாங்க சொல்லிட்டு அம்மா முத்துபேட்டைக்கு காரியத்துக்காக மளிகை சாமான் வாங்க கிளம்பி போனாள் இந்த வெயில்ல போனது ரொம்ப வெக்கையா இருக்கவும் மூஞ்சி கை கால் எல்லாம் கழுவிட்டு தாத்தாவோட கட்டிலில் கண்ணயர்ந்தேன்.

நல்லா பொழுது விடிஞ்சிருந்தது
தம்பி தம்பி எந்திரி நேரமாய்டுச்சுல்லா எந்திரிப்பா.
தாத்தா குரல்கேட்டு விழித்தேன்
தாத்தா என் தலமாட்டில் நின்று சிரித்தார்.
போ தாத்தா நான் இன்னும் தூங்கனும்.

தம்பி நல்ல பிள்ளையில்ல கிளம்புய்யா
மேட்டுநிலத்துல மடைய கட்டனும் தண்ணியெல்லாம் வடிஞ்சுடும் சீக்கிரம் வா
அரைதூக்கத்தோடு கிளம்பினேன்.

வழக்கம்போல தாத்தா மறக்காம அந்த கம்ப எடுத்துகிட்டு என்னயவும் அழைச்சுகிட்டு சுப்புனி டீ கடைக்கு போனோம்.
டீ கடையில பஞ்சாயத்து தலைவர் நின்னுகிட்டு இருந்தார்.

என்ன கிட்டு தலையாரி சௌக்கியமா? என்ன கோட்டகத்துல நம்ம சுப்பையன் பங்குல எவனோ மாட்ட ஓட்டிவிட்டானாம்ல அத என்னனு பாரும்.

சரிங்க பார்க்குறேன் ஆனா அந்த வடக்குவெளி பசங்க பண்ற அட்ரசிட்டி தாங்கல நீங்க கொஞ்சம் சொல்லிவைங்க இல்லாட்டி பூரா பயலுவ மாட்டையும் புடிச்சி கட்டிபுடுவேன் ஆமா.

சரிய்யா விடு அவனுங்க எப்பவும் இப்படித்தான் பிரச்சனை வராமா பார்த்துக்க நான் அவனுங்கள் கண்டிச்சு வைக்கிறேன்.

டீ குடித்து முடித்து நேரா பாய்கடைக்கு வந்தோம் தாத்தா வெத்திலையும் அவரோ லெஷ்மி சீவலும் வாங்கிட்டு எனக்கு மிட்டாய் வாங்கிட்டு அப்படியே பேசிகிட்டே நடந்தோம் வழியில தாத்தா வெத்திலைஎடுத்து காம்ப கிள்ளி எங்கிட்ட கொடுத்துட்டு சுண்ணாம்ப தடவி லெஷ்மி சீவல வச்சி வாயில அதக்கி கிட்டே வந்தாங்க.

ஏன் தாத்தா உன்னை எல்லாரும் கிட்டு கிட்டுன்னு சொல்றாங்க முழு பேர சொல்ல மாட்டாங்களா?

தெரியலப்பா ஏன் நீ வேணும்னா என் முழு பேர சொல்லி கூப்புடேன்
அய்ய பெரியவங்கல அப்படி சொல்லகூடாதுன்னு அலமேலு டீச்சர் சொன்னாங்க
பேசிகிட்டே நேரா மேட்டு நிலத்தை நெருங்கினோம் எப்பவும் தாத்தா மேட்டு நிலத்துக்கு

போவனும்னா எங்க தோப்பு வழியா தான் கூட்டிட்டு போவாங்க ஆன இன்னைக்கு பெரிய மதகடி வழியா போனோம்.

பெரிய மதகுல வேற தண்ணி புல்லா ஓடிகிட்டு இருந்துச்சு.

தாத்தா கையில இருந்த கம்ப கிழே வச்சிட்டு என்னைய தூக்கிகிட்டு லாவகமா மதகு குழாய தாண்டி அந்த பக்கம் கொண்டு விட்டாங்க, தம்பி பத்திரமா இரு நான் அந்தபக்கம் போய் கம்ப எடுத்துகிட்டு வர்ரேன் இங்கேயே நில்லுன்னு சொல்லிட்டு விறு விறுன்னு மதகோட அந்தபக்கம் போனாங்க.

கம்ப எடுத்திகிட்டு மதகுல வந்துகிட்டே இருந்தாங்க இதோ பக்கத்துல வந்துட்டங்க அந்த மதகு கட்டைகிட்ட வர்றதுக்குள்ள திடீர்ன்னு கால் தவறி, அய்யோ தாத்தான்னு நான் அலற தண்ணீக்குள்ள விழுந்துட்டாங்க.

நான் தாத்தா தாத்தான்னு அழுதுகிட்டே வாய்க்கால் ஓரத்துல ஒடிகிட்டே இருக்கேன் தாத்தா கொஞ்ச கொஞ்சமா தண்னில மூழ்கிட்டே இருக்காங்க அந்த கம்பு மட்டும் தாத்தா கையவிட்டு போகல தண்னிக்கு மேலேயே தெரியுது. நான் கத்திகிட்டே இருக்கேன் ஆனா என் சத்தம் யாருக்குமே கேக்கல பெருங்குரலெடுத்து கத்துறேன் ஆனா நான் கத்துறது இப்ப எனக்கே கேட்கல .கம்பும் என் சத்தம் மாதிரி தூரமா போயிகிட்டே இருக்கு.

திடீர்னு என்ன புடிச்சி யாரோ உலுக்குன மாரி இருந்துச்சு உடம்பெல்லாம் வேர்த்து கொட்டுது கண்முழிச்சா தாத்தாவோட கட்டில்ல கிடக்கேன்.

ச்சே இதெல்லாம் கனவா அதிர்ச்சி விலகாமல் அப்படியே கிடந்தேன் தலைக்குமேல பார்த்தா அந்த கம்பு வச்ச இடத்துல அப்படியே இருக்கு.

ஆனால் எனக்குத்தான் வாயெல்லாம் வெத்திலைகாம்ப திண்ணா எப்படியிருக்குமோ அப்படியிருந்தது.

**G.மணிகண்டன், B.Pharm.,**
அசேசம், மன்னார்குடி

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

+91 8220567322

http://maintharkal.mannai.in